மாலை 49 மணி 1 ஜனவரி 2007 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு





# அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில்

திருமயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 24985112

## குடமுழுக்கு விழா அழைப்பிதழ்

**நாள் : 29.01.2007 திங்கட்கிழமை**

ஒத்தின் பொருள் முடியும் இத்தனையே - உத்தமர்பேர்
ஏத்துதிறம் அறிமின் ஏழைகள் - ஒத்து அதனை
வல்லீரல் நன்றதனை மாட்டீரேல் மாதவன்பேர்
சொல்லுவதே ஒத்தின் சுருக்கு

- பூதத்தாழ்வார்

அன்புடையீர்,

மிகப் பழமை வாய்ந்ததும் ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமும், திருமழிசைபிரானுக்கு ஞான உபதேசம் செய்த இடமும், பிருகுமுனிவர் தவம் செய்த இடமுமான சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் மயிலாப்பூர் அருள்மிகு அமிர்தவல்லி தாயார் சமேத ஸ்ரீ மாதவப் பெருமாள் திருக்கோயிலில், இராஜகோபுரம் விமானங்கள், மூலஸ்தானங்கள், மண்டபங்கள் சுற்றுச் சுவர்கள் மற்றும் பல திருப்பணிகள் முடிவுற்று தற்போது வரும் விய ஆண்டு தைமாதம் 11ம் நாள் 25.01.2007 முதல் யாகசாலை பூஜைகள் துவக்கப்பட்டு தைமாதம் 15ம் நாள் 29.01.2007 காலை 9.00 மணி முதல் 10.30 மணிக்குள் குடமுழுக்கு விழா மிக சிறப்பாக நடைபெற உள்ளது. இவ்விழாவில் ஆன்மிக அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ மாதவனின் திருவருள் பெற வேண்டுகிறோம்.

குறிப்பு : குடமுழுக்கு விழாவுக்கு நன்கொடை செலுத்த விரும்புவோர், செயல் அலுவலர் அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை - 4 என்ற முகவரிக்கு காசோலை, வங்கி வரைவோலையாக அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

துு. சந்திரசேகரன்
செயல் அலுவலர்.

G.K. மனோகர்
தலைவர், அறங்காவலர் குழு
K. பலராமன், பொன் சம்பத்
A. குமாரி, து. முருகன்
அறங்காவலர்கள்

திருக்கோயில்

| திருவள்ளுவர் | ஆண்டு 2037 | விய- தை |
| --- | --- | --- |
| மாலை 49 | மணி 1 | ஜனவரி 2007 |


# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.

புத்துணர்வோடு, புத்தரிசியினை புதுப்பானையிலிட்டு, புது வாழ்வு புலரட்டும் என்ற நம்பிக்கையோடு, மனைகள் தோறும் மங்கலம் பொங்கிட ''தை மகளே'' வருக, சீரும் சிறப்பும் தருக என இவ்வாண்டின் பொங்கல் திருநாளை வரவேற்போம்.

''செறியிருள் நீக்க வந்த செங்கதிர்'' என்று சேக்கிழார் பெருமானும், '' ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்'' என இளங்கோவடிகளும் போற்றிய ''ஆதவனை, கதிரவனை'', மகாகவி காளிதாசன், பாவேந்தர் பாரதிதாசன், ஆகியோரின் புகழ் மாலையோடு கம்பராமாயணக் காட்சிதனையும் சேர்த்து ''ஞாயிறு போற்றுவோம்'' எனும் தலைப்பில் பேராசிரியர் திரு. தி.இராசகோபாலன் அவர்கள் தித்திப்பான சிந்தனைப் படைப்பொன்றை இவ்விதழில் வழங்கியுள்ளார்.

''வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே'' என்ற வாக்குப்படி, தமிழ்க்கடவுள் முருகனின் ''கந்தரநுபுதி'' யினைத் தனக்கேயுள்ள தனிப்பாங்கில் தொடர் கட்டுரையாக பேராசிரியர் டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்கள் ''வேலும் மயிலும் துணை'' எனும் தலைப்பில் இவ்விதழில் தொடங்கியுள்ளார். கந்தன் அருள் பெறுவோம். கவலைகளை மறப்போம்.

ஞானிகளில் தனித்துவம் கண்ட தத்துவ ஞானியாக ''வடலூர் வள்ளலார் சுவாமிகள்'', எளிமையான வாழ்வியல் சித்தாந்தத்தை வகுத்துத் தந்துள்ளவற்றை ''தத்துவ உலகில் ஒரு புரட்சியாளர்'' எனும் தலைப்பில் நாவுக்கரசர் டாக்டர் சோ. சத்தியசீலன் அவர்கள் வழங்கியுள்ள ஆய்வுக் கட்டுரை அனைவரும் படித்துப் பின்பற்ற வேண்டியதொன்றாகும்.

சேக்கிழார் பெருமானுக்கு, சுந்தரமூர்த்தி நாயனார் தோழமை தந்தமையை ''தோழமை நெறி தந்த சுந்தரர்'' எனும் தலைப்பில் , திரு. அழ, முத்துப்பழனியப்பன் அவர்களும், ''பிள்ளை லோகாச்சாரியார் அவர்களின் பண்பினை ''பொறாமையில்லாப் பெருமை'' எனும் தலைப்பில் முனைவர் திரு. டி.எஸ். ராமஸ்வாமி அவர்களும், நாடாதூர் பெருமானின் சிறப்பினை, திரு.எம்.என் ஸ்ரீனிவாசன் அவர்களும் வழங்கியுள்ள கட்டுரைகள் பொங்கலோடு சேர்ந்த செங்கரும்பாக இனித்து சுவைத்திட வைக்கும் இனிய கட்டுரைகளாகும்.

துன்பங்கள் நீக்கிடும் திருநெடுங்களத் திருக்கோயில் தல வரலாற்றினையும் தோஷங்கள் நிவர்த்திக்கும் திருவிடந்தைத் திருக்தல வரலாற்றினையும், சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில் தல வரலாற்றினையும் திருத்தல உலாவாக இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது. திருக்தலங்கள் சிறப்புணர்வோம், சிந்தைதனில் வித்திட்டு, தீவினைகள் நீக்கிடுவோம்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,**
**119, உத்தமர் காந்தி சாலை,**
**சென்னை - 600 034.**




29.12.2006 அன்று சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற தலவரலாறு மற்றும் போற்றிப் புத்தகங்கள் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ் அவர்கள், தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர், திரு. இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆகியோர்.

## காலச்சுவடுகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வில்லியம் கியாரோ (William Garrow) என்ற கலெக்டர் பவானி கோயிலின் வடகோபுர வாயிலின் அருகே மாளிகையொன்றில் வசித்து வந்தார். ஒரு நாள் அவர் கனவில் பெண் ஒருத்தி வந்து அவர் படுக்கையை விட்டு உடனே வெளியே வரும்படி சொல்ல, அவரும் அப்படியே செய்தார். மருகணத்தில் அவர் படுக்கையறைக்கு மேலிருந்த விட்டம் ஒடிந்து மேல்கூரை இடிந்து விழுந்து விட்டது. வேதநாயகியம்மையே இப்படி தம்மை காப்பாற்றியதாக எண்ணி அளவுகடந்த பக்தி கொண்டார். அதற்கு அறிகுறியாக பள்ளியறையில் வைக்க ஒரு தந்தக் கட்டில் செய்தளித்தார். அதில் ''பவானிக் கூடல் சங்கமேசர் வேதநாயகியம்மைக்கு உ வில்லியம் கியாரோதுரைமகனார் அளித்தது'' என்று தமிழிலும் ''William Garrow 1804'' என்று ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருக்கிறது.



# அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.

## இதழின் உள்ளே ....


| | | |
|---|---|---|
| 1 | ஞாயிறு போற்றுவோம் - பேராசிரியர் திரு. தி. இராசகோபாலன் | 4 |
| 2 | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர் | 8 |
| 3 | வேலும் மயிலும் துணை - பேராசிரியர் டாக்டர் சரசுவதி இராமநாதன் | 11 |
| 4 | தத்தவ உலகில் ஒரு புரட்சியாளர் - நாவுக்கரசர் டாக்டர் சோ. சத்தியசீலன் | 14 |
| 5 | பொறாமையில்லாப் பெருமை - முனைவர் டி.எஸ். ராமஸ்வாமி | 17 |
| 6 | கல்வெட்டுகளில் காணப்படும் ஒப்படைக்கிளவி வாசகங்கள் | 20 |
| 7 | அம்மாவான ஆசான் - திரு. எம். என். ஸ்ரீனிவாசன் | 22 |
| 8 | தோழமை நெறிதந்த சுந்தரர் - திரு. அழ. முத்துப்பழனியப்பன் | 23 |
| 9 | திருவிளையாடல் புராணம் - வலை வீசின படலம் - திரு. இரா. அரங்கசாமி | 26 |
| 10 | குரு பூஜை - திரு. பெ. ராம நாதபிள்ளை, பி.ஏ., பி.எட்., | 29 |
| 11 | துன்பம் போக்கும் திருநெடுங்களம் திருக்கோயில் | 30 |
| 12 | திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் திரு. டி.வி. வெங்கட் ராமன், இ.ஆ.ப., (ஓய்வு) | 34 |
| 13 | தோஷங்கள் நிவர்த்தியாகும் திருவிடந்தை திருத்தலம் | 37 |

# ஞாயிறு போற்றுவோம்



பேராசிரியர் தி. இராசகோபாலன்

கிரகங்களின் இயக்கத்தைத் தன் கையில் வைத்திருக்கும் கதிரவனைச் சரித்திர காலத்திற்கு முன்பிருந்து அனைவரும் போற்றி வழிபட்டு வந்திருக்கின்றனர். வான் மண்டலத்திலே தனி ஆதிக்கம் செலுத்துபவன் ஞாயிறு என்பதால், சூரிய மண்டலம் என அறிவியல் வல்லுநர்களும் அழைக்கின்றனர். மகாகவி பாரதியார் உலகத்தின் ஆக்கத்திற்கு ஆதவன் காரணமாய் இருப்பதாலும், வேதவல்லுநர்களான முனிவர்களும், செந்நாப் புலவர்களும் பரிதியைப் போற்றிப் புகழ்வதால், கதிரவா உன் முகத்தை எனக்குச் சற்றுக் காட்டு என்று பாடுகிறார்.

''சுருதியின்கண் முனிவரும் பின்னே
தூமொழிப் புலவோர் பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமையென்றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்;
பரிதியே பொருள் யாவிற்கு முதலே !
பானுவே! பொன்செய்பேரொளித் திரளே!
கருதி நின்னை வணங்கிட வந்தேன்;
கதிர்கொள்கொள் முகம் காட்டுதி சற்றே''
என்பது பாடல்)

மகாகவி பாரதியைப் போலவே கேரளத்துக் கவிஞனாகிய குமாரன் ஆசான் ஞாயிற்றைப் படைப்புக் கடவுளாகவே பாவித்துப் பாடுகிறான். ஞாயிற்றின் வரவால் தான் பூமியின் கிழட்டுத்தனம் நீங்குகிறது என்றும் பாடுகிறார் ஆசான், ''பரிவர்த்தனம்'' எனுந் தலைப்பில். ''ஆந்தையும் நரியும் அலறி ஓட, விரைந்து சேவல்கள் நல்வரவு முழக்க, சுடர்விட்டு உயரும் சூரிய தேவாஃ தயங்கி

நில்லாது திரும்பி நோக்காது, உனக்கே உரிய பாதையில், நடைபோட்டுச்செல்க: செல்க நீ!

அகத்தில் சூழும் அந்தகாரமும், புறத்தில் மூடிப் புதைந்த பனியும் நடுக்கம் தீரச் சுடுவெயில் பரப்பு! உறைந்து குளிர்ந்த கிழட்டுப் பூமியின் நாடி நரம்பில் உஷ்ணரத்தம் ஓடத் தொடங்கட்டும் என்பது ஆசான், கதிரவன்மேல் போற்றிப் பாடியதுதி ஆகும்.

சேக்கிழார் சுவாமிகளும் பெரிய புராணத்தைப் பற்றிச் **''செறியிருள் நீக்க வந்த செங்கதிர்''** எனக் குறிப்பிடுகின்றார். இளங்கோவடிகள் **''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்''** எனக் கதிரவனைக் கடவுளாகவே கருதிப் பாடுகிறார்.

சித்திராப் பௌர்ணமியிலிருந்து பங்குனிப் பெருவிழா வரையில் தமிழக வரலாற்றில் மாதங்கள் தோறும் திருவிழாக்கள் உண்டு. இந்த விழாக்கள் வெறும் குதூகலத்திற்காகவும் கொண்டாட்டத்திற்காகவும் மட்டும் உருவாக்கப்பட்டவை அல்ல. இனிப்புப் பண்டங்கள் அனைத்திலும் சர்க்கரை உள்ளீடாக இருப்பது போல, கார வகைகள் அனைத்திலும் உப்பு உள்ளீடாக இருப்பது போல, திருவிழாக்கள் அனைத்திலும் ஆன்மிகம் உள்ளீடாக மறைந்து நிற்கும்.


பொங்கல் விழாவிலும் சடங்குகள் உண்டென்றாலும் அச்சடங்குகளிலும் காரண காரியங்கள் உண்டு. ஆதி மனிதன் வேட்டையாடி வாழ்க்கை நடத்திய காலத்தில் ''தாய்த்தெய்வ வழிபாடு'' தான் முதலில் தோன்றியது. அதற்கடுத்துத் தோன்றியது சூரிய வழிபாடு எனவேதான் அறுவகைச் சமயங்களைச் சொல்லவந்த ஆதிசங்கரர், சூரிய வழிபாட்டை (சௌரம்) முதலாவதாக வைத்தார்.

வடமாநிலங்களிலும் சூரிய வழிபாடு சிறந்திருத்தலின் அறிகுறியாகத்தான் இன்று ஒரிசாவில் காணப்படும் கோனார்க் கோயில் ஆகும். திருமுருகாற்றுப்படை தொடங்கும் போதே, சூரிய வழிபாட்டோடுதான் தொடங்குகிறது. உலகத்தார் எல்லோரும் மகிழும்படியாக வலமாக எழுகின்ற பலரும் போற்றும் ஞாயிறு **(உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு)** என்று பாடுவார் நக்கீரர். ஞாயிறு போற்றுதும் என இளங்கோவடிகளும் சூரியனையே தேவனாக நினைத்துச்சிலப்பதிகாரத்தில் வழிபடுகிறார்.

பொங்கல் விழாவின் நோக்கமும் கதிரவனை வழிபடுவதுதான். வீட்டுக்கு வெளியே அல்லது முற்றத்தில் கதிரவன் ஒளிபடும்படியாகப் பொங்கல் பானையை வைப்பதும், பொங்கிய பொங்கலை வறட்டியிலே வைத்துக் கதிரவனுக்குப் படைப்பதை இன்றும் கிராமப் புறங்களில் காணலாம். வடமொழியில் சங்கராந்தி என வழங்கப்படுவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். வழிபாடுகளுக்கிடையில் தலை சிறந்த வழிபாடாகச் சூரிய வழிபாட்டைச் சொல்லுகிறது. தைத்ரிய உபநிஷத். காரணம் மற்ற தெய்வங்கள் எல்லாம் ஆராதனைக்கு ஏற்றவாறுதாம் அருள்புரியும். ஆனால் சூரிய ஆராதனை செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒவ்வொரு நாளும் பிரத்தியட்சமாகக் காட்சியளிப்பான்.

சூரியனுக்குத் துவாதசாத்மா என்றொரு பெயரும் உண்டு. அவனுடைய ஆதிக்கத்தின் கீழ் மித்திரன், ஆர்யமா, பூஷன் போன்ற 12 தேவதைகள் அடக்கம் என்பதால் அவனைத் துவாதசாத்மா என யஜுர் வேதம் அழைக்கின்றது. சூரியன் ஒருவனை வழிபாட்டாலே 12 தேவதைகளையும் வழிபட்ட பலன் கிட்டும். கதிரவனுடைய அருமை பெருமைகளை உணர்ந்த சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணம் செங்கதிரவன் போன்றது என்றார்.

மனித வர்க்கத்தின் உழைப்புக்கு உறுதுணையாக இருப்பவன் சூரியன். செடி, கொடிகள் ஆகிய பயிர் பச்சைகளுக்குத் துணை நிற்பவன் என்பதால் சவிதா எனக் காயத்ரி மந்திரம் அவனை அழைக்கும். பொன் நிறத்தை யுடைய நெல், கோதுமை போன்ற உணவுப் பொருட்களை அவன் உற்பத்தி செய்து தருவதால், அவனுக்கு இரணிய கர்ப்பன் என்றொரு பெயரும் உண்டு. எனவேதான்



சூரிய நமஸ்காரம் என்ற பெயரில் அவன் ஒவ்வொரு நாளும் வணங்கப்படுகிறான்.

உழைப்புக்கும், உற்பத்திக்கும் சூரியன் காரணமாக இருப்பதால், இந்தியா மட்டுமின்றி கிழக்காசிய நாடுகள் முழுவதும் அவன் வணங்கப்படுகிறான். சீன ஞானியாகிய லாவோட்ஸ் ஒவ்வொரு நாளும் கடற்கரைக்குச் சென்று சூரியனை வழிபட்டுத் திரும்புவாராம். பயிர் பச்சைகளுக்கு ஒளிச்சக்தியைத் தருவதோடு மழையைத் தருபவனும் அவனாக இருப்பதால் சூரியனுக்கு மித்ரா வருணன் என்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. மகாகவி காளிதாசன் இரகுவம்சத்திலே மித்ரா வருணனை வெகு சிறப்பாகப் பேசுவார்.

ஓர் அரசன் எப்படி வரி வசூல் செய்ய வேண்டுமென்றால் சூரியனைப் போலச் செய்ய வேண்டும் என்கிறார் காளிதாசன். சூரியன் கடலிலிருந்து சிறிது நீரை எடுத்துக் கொண்டு அதனை ஆவியாக மாற்றிப் பின்னர் பெருமழையைத் தருவது போல மன்னனும் ஒரு பங்கு வரியை மக்களிடமிருந்து பெற்று. பல மடங்கு நன்மை செய்ய வேண்டுமாம். இவ்விடத்தில் கதிரவன் பல மடங்கு நன்மை செய்பவன் என்பதால் நம்மால் வணங்கப்படுகிறான். பொங்கலன்று புதிதாக அறுவடை செய்த நெல்லைக் கொண்டு (புதிரைக் கொண்டு) வழிபடுவதன் நோக்கமும் அவனுக்கு நன்றி காட்டுவதற்குத்தான். மகாபாரதத்தில் வனத்திலே வாழும் பாண்டவர்கள் பட்டினியாலே சாக வேண்டும் என துரியோதனன் விரும்புகிறான். மேலும், வனத்திலே இருக்கும் பஞ்சபாண்டவர்கள் விருந்தினர்களை உபசரிக்காத அபச்சாரத்திற்கு உள்ளாக வேண்டும் என்பது துரியோதனனுடைய எண்ணமாகும். அதனால், விருந்தினர்களைப் பஞ்சபாண்டவர்களிடம் தொடர்ந் அனுப்பிக்கொண்டேயிருக்கிறான். ஆனால் தருமபுத்திரன் சூரியனை வழிபட்டு ஓர் அட்சய பாத்திரத்தைப் பெற்று உணவு பஞ்சத்தைப் போக்குகின்றான்.




இராமாயணத்திலே போர்க்களத்தில் நிற்கும் இராமபிரான் ஒரு கட்டத்தில் மனச்சோர்வு அடைகிறான். தளர்ந்து நிற்கும் இராமனை எடுத்து நிறுத்துவதற்காக அகத்திய முனிவர் அங்கு வருகிறார். சூரியனுக்குரிய மந்திரத்தை (ஆதித்ய ஹிருதயம்) இராமனுக்கு உபதேசம் செய்து மூன்று முறை ஜபம் செய்யச் சொல்லுகிறார். இராமனும் அவ்வாறே மூன்று முறை ஜபம் செய்து புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுவதாக வால்மீகியின் வாக்கு. அகத்தியர் சூரியனுடைய உபாசகர்.

வடமொழியிலே சூரிய சதகம் என்றொரு சிற்றிலக்கியம் உண்டு. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயூரகவி இயற்றிய நூல் அது. மயூரகவி தொழுநோயால் துன்புறுகிறார். அந்த வேதனையிலிருந்து விடுபட, சூரியனை 100 பாடல்களில் தோத்திரம் செய்கிறார். அதற்குச் சூரிய சதகம் எனப் பெயர். கதிரவன் கண் கண்ட தெய்வம் என்பதால் உருவ வழிபாட்டை விரும்பாத பெர்சியாவில் கூட சூரிய வழிபாடு இருந்திருக்கிறது.

கம்பராமாயணத்தில் அனுமன் கலைகள் அனைத்தையும் கற்றவனாகவும் வேதக் கடலாகவும் இராமனுக்குக் காட்சி தருகின்றான். நாட்பட மறைகளாலும், நறைபடா ஞானத்தாலும், கோட்படாப் பதமாகவும் திகழ்கின்ற அனுமனைப் பார்த்து வியந்து நிற்கின்றான் இராமபிரான். இந்த ஞானத்தை அனுமன் எவ்வாறு பெற்றான்?

தொடக்கத்தில் அனுமன் தன் தந்தையாகிய வாயுபுத்திரனைப் பார்த்து தனக்கு ஞானத்தைத் தருமாறு வேண்டுகின்றான். அதற்கு வாயு புத்திரன் தனக்கு நல்லறிவையும், ஞானத்தையும் தருகின்ற அதிகாரம் இல்லையென்றும் அவ்வதிகாரம் சூரிய பகவானுக்கு மட்டுமே உண்டென்றும் கூறுகின்றான். அதனால் அனுமன் சூரியபகவானை வணங்கி, வழிபட்டு யாரும் வியக்கத்தக்க ஞானத்தைப் பெற்றதாகப் புராணம் புலப்படுத்துகின்றது.

பொங்கல் பண்டிகையின் ஆதார சுருதியாகச் சூரிய வழிபாடு திகழ்ந்தாலும் அது ஒரு சமுதாயப் பெருவிழாவாகவும் கொண்டாடப் பெறுகிறது. மானுடத்தின்



உழைப்பின் பெருமையை எடுத்துக் காட்டுகின்ற விழாவாகவும் பொங்கல் அமைந்திருப்பதால் சாதி மத பேதமின்றிக் கொண்டாடப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் கூட ''ஹார்வெஸ்ட் டே'' எனும் பெயரில் (அறுவடைநாள்) கோயில்களிலேயே கொண்டாடப் பெறுகிறது. மக்கள் தம் உழைப்பில் மலையாத நம்பிக்கை எக்களிக்க வேண்டும் இதயத்தில் என்பார் பாவேந்தர் பாரதிதாசன். அவ்வாறே மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த திருவிழா என்பதால் ஆத்திகர்கள் மட்டுமின்றி பகுத்தறிவாதிகளும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

மற்ற விழாக்களுக்கு இல்லாத சிறப்பு பொங்கலுக்கு என்னவென்றால் மனிதர்கள் மட்டுமின்றி மானுடத்திற்குப் பயன்படும் கால்நடைகளும் சிறப்பிக்கப்படுகின்றன. பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. உழவுத் தொழிலுக்குப் பயன்படும் ஆடு மாடுகளுக்கும் மாலைகள் அணிவிக்கப் பெற்று தெய்வங்களாகவே வணங்கப்படுகின்றன.


ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் எனப் பேசப்படுகின்ற இக்காலத்தில் பொங்கல் விழா மகளிருக்கும் உரிய இடத்தைத் தருகிறது. தென் மாவட்டங்களில் கன்னிப் பொங்கல் என மூன்றாவது நாள் கொண்டாடப்படுகிறது. அந்நாளில் பெண்கள் மட்டும் நல்ல உணவு வகைகளைக் குளக்கரை ஆற்றங்கரைகளுக்கு எடுத்துச் சென்று உண்டு மகிழ்வதோடு ஆடிப்பாடியும் மகிழ்வர்.

தென் மாவட்டங்களில் கன்னிப் பொங்கல் எனக் கொண்டாடப்படுகின்ற அதே விழா சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் காணும் பொங்கலாகக் கொண்டாடப் படுகின்றது. காணும் பொங்கல் சிறியவர்கள், பெரியவர்களை வணங்க வேண்டும் என்பதையும் சிறியோர்க்குப் பணிவு வேண்டும் என்பதையும் கற்றுத் தருகின்றன. மேலும் பெரியவர்கள் சிறியவர்களை மதிக்க வேண்டும். அவர்களை வாழ்த்த வேண்டும் எனும் பண்பாட்டை எடுத்துச் சொல்வதாகவும் விளங்குகின்றது. பொங்கல் விழா ஒரு சமயவிழாவாகத் திகழ்வதோடு ஒரு சமுதாய விழாவாகவும் விளங்குகின்றது. புதுவருடப் பிறப்பன்று புது நன்மைகள் பூக்க வேண்டும் என்பதன் அடையாளமாகப் புதிரைப் படைக்கின்றோம். புதிர் பானையில் பொங்குவதோடு வாழ்க்கை அடையாளமாகப் புதிரைப் படைக்கின்றோம். புதிர் பானையில் பொங்குவதோடு வாழ்க்கையிலும் புதிர்கள் பொங்க வேண்டும்.


## வீண் விவாதம் செய்யாதே

பயனில்லா வாதங்களினால் நன்மை என்ன விளையும்? தூய நம்பிக்கையுள்ள மனத்துடன் இறைநாமத்தை ஜெபம் செய். அது உனக்கு நன்மை தரும்.

- இராமகிருஷ்ண பரமஹம்சர்



# அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில் சிறுவாச்சூர்



அருளாளர்களாலும், ஆன்றோர்களாலும் மக்கள் மன அமைதியுடன் மகிழ்வான வாழ்வு பெற ஓர் உந்து சக்தியாய் அமைக்கப் பட்டதே ஆலய வழிபாட்டு முறையாகும்.

குறிப்பிட்ட இடங்களில், மனதைக் குவித்து நல்வழிப்படுத்தும் திருவருட்திறன் நிரம்ப இருப்பது கண்டு, நம் முன்னோர்கள் அவ்விடங்களில் ஆலயங்கள் அமைத்து இறைவன் திருஉருக்களைப் பிரதிட்டை செய்து அனைவரும் பயனடையச் செய்துள்ளனர்.

மூர்த்தி, தலம், தீர்த்தமென முச்சிறப்பும் அவ்விடங்களுக்கு உண்டு. நம் தமிழ்த்திருநாட்டில் மேற்குறிப்பிட்ட சிறப்புக்கள் அமைந்த பல திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் சிறப்புடைய ஒன்று தான் சிறுவாச்சூர்திருத்தலமாகும்.

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலை பெரம்பலூருக்கு 8 கிலோ மீட்டர் முன்னதாக சிறுவாச்சூர் ஊர் உள்ளது. நெடுஞ்சாலையில் ஒரு அழகான வளைவு சிறுவாச்சூர் ஆலய அமைவிடம் பற்றி அறிவித்து, நம்மையெல்லாம் அன்புடன் அழைக்கிறது. நெடுஞ்சாலையிலிருந்து சுமார்1 கிலோ மீட்டர் உள்ளே சென்றால் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில் காட்சி தரும். சுற்றிலும் மலைகளும் ஏரியும், தோப்புகளும் குளமுமாய் இயற்கை எழில் மிகுந்த இடத்தில் மனத்தைக் கவரும் சூழலில் அன்னை மதுரகாளி அமர்ந்து அருளாட்சி செய்து வருகிறாள்.

| | | |
|---|---|---|
| மூர்த்தி | - | மதுரகாளி |
| தலம் | - | சிறுவாச்சூர் |
| தீர்த்தம் | - | திருக்குளம் |
| தலவிருட்சம் | - | மருதமரம் |

**செவிவழிச் செய்திகள்**

சிலப்பதிகாரக் காவிய நாயகி கண்ணகி வரலாற்றுடன் தொடர்புபடுத்தி இங்கு அம்மனின் வரலாறு செவிவழிச் செய்தியாய்க் கூறப்பட்டு வருகிறது.

கற்புடைத் தெய்வம் கண்ணகி தன் கணவர்க்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு பொறாமல் கோபம் கொண்டு மதுரையை எரித்த பின் மன அமைதியின்றி அலைந்து கொண்டிருக்கையில் இத்தலமடைந்து அமைதி கொண்டாள் எனவும், கண்ணகியைக் கொண்டு மதுரையை எரியூட்டிய மதுரை காளியம்மனே இத்தலம் விரும்பி அமர்ந்தாள் எனவும் பெரியோர்கள் கூறுகின்றனர்.

சிறுவாச்சூரின் வழிபடு தெய்வம் செல்லியம்மன் ஆகும். ஒரு மந்திரவாதி தனது மந்திர வலிமையால் இவ்வம்மையைக் கட்டுப்படுத்தத் தீய செயல்களுக்குப் பயன்படுத்தி வந்துள்ளான். மதுரை காளியம்மன் இத்தலத்திற்கு ஒரு வெள்ளிக் கிழமை இரவு வந்து சேர்கிறாள். செல்லி யம்மனுடன் இரவு தங்க இடம் கேட்கிறாள். செல்லியம்மனோ தன்னை மந்திரவலிமை யால் தொல்லைப்படுத்தும் மந்திரவாதி பற்றிக் கூறுகிறாள். மதுரைகாளியம்மனோ தான் அதற்குத் தக்க வழி செய்வதாகக் கூறித் தங்குகிறாள். வழக்கப்படி வந்த மந்திரவாதியை அன்னை எதிர்கொண்டு அழித்து விடுகிறாள். செல்லியம்மன் அன்னை திறன் கண்டு இனி அவறே சிறுவாச்சூர் ஆலயத்திலிருந்து அடியார்கட்கு அருள்

பாலித்து வர வேண்டுகிறாள். தான் அருகிருக்கும் பெரியசாமி மலை சென்று விடுவதாகவும் ஆனால் கோயிலில் எப்பொழுதும் தனக்கு முதல் மரியாதை வேண்டுமெனவும் கூறுகிறாள். மதுரை காளியம்மனும் அதற்கு ஒப்புக் கொண்டு ஆலயத்திலே அமரச் செல்லியம்மன் பெரியசாமி மலை சென்று கோயில் கொள்கிறாள். சிறுவாச்சூருக்கு வெள்ளிக் கிழமை வந்த மதுரை காளியம்மன் பக்தர்களுக்குத் திங்கள் கிழமை காட்சி தருகிறாள். எனவே தான் சிறுவாச்சூர் ஆலயம், வெள்ளி, திங்கள் மட்டும் திறந்து பூசைசெய்யப்படுவதாகக் கூறுகிறார்கள்.

இந்த நாட்கள் தவிர ஆலய சிறப்புத் திருநாட்கள் சிலவற்றிலும் ஆலயம் திறந்து பூசைசெய்யப்பட்டு வருகிறது. மற்ற நாட்களில் மதுரகாளியம்மனும், செல்லியம்மனுடன் பெரியசாமி மலையில் தங்குவதாகக் கூறுகிறார்கள். மதுரை காளியம்மன் என்ற திருப்பெயரே பின்னாட்களில் மருவி மதுரகாளியம்மனாக வந்ததாகக் கூறுகிறார்கள். சினங்கொண்டு வந்த மதுரகாளியம்மன் இங்கு வந்து அமைதியுற்றுப் பக்தர்களுக்குப் பல இனிய நிகழ்வுகளை அருளுவதால் மதுரகாளியம்மன் (மதுரம் - இனிமை) என்ற பெயர் பெற்றாள் என்பதும் பொருத்தமுடையதே. செல்லியம்மன் தனக்கு முதல் மரியாதை வேண்டுமென்று கேட்டதற்கு ஏற்ப பூசையின் போது தீபாரதனை காட்டுகையில் முதலில் மலை நோக்கி மேலே தீபாரதனை காட்டி விட்டுத்தான் பிற்பாடு மதுரகாளியம்மனுக்குத் தீபாராதனை காட்டும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.

**சுற்றுக் கோயில்கள்**

**பெரியசாமி மலைத் திருக்கோயில்கள்**

சுற்றிலும் மலைகளும் அடர்த்தியான மரங்களும், ஓடையும் உள்ள மனதைக் கவரும் இயற்கைச் சூழல் - ஆனந்தமான காற்று - சலசலவென ஓடும் ஓடையின் இனிய ஓசைகள் எவர் மனதையும் ஈர்க்கும். உலகளவில் தொல்லைகளையும் ஊர்ப்பிரச்சனைகளையும் எட்டி நிற்கச் செய்து ஏக மனதாய் ஐயனின், அம்மையின் திருவருளை ஒருவர் உணர வேண்டுமானால் ஓடிவாருங்கள். உண்மை உணருங்கள்.

சிறுவாச்சூரிலிருந்து மேற்கே நாலைந்து கிலோ மீட்டர் தொலைவு சென்றால் பெரிய மலை அடிவாரம் வருகிறது. மருத மரங்களும், புளிய மரங்களும் பெருவாரியாக உள்ளன. சிற்றோடை ஒன்றும் உள்ளது. நல்ல சூழல் முதலில் பார்த்து வணங்க வேண்டியது செல்லியம்மன் ஆலயமாகும். இங்கு செல்லியம்மன், லாடசாமி, பெரியசாமி, பெரியகண்ணிஐயா, கிணத்தடி ஐயா முதலிய தெய்வங்கள் சுட்டமண்ணால் ஆக்கப்பட்ட திருமேனி கொண்டுள்ளனர். சூலங்களும் நடப்பட்டுவழிபடப்பெறுகின்றது.

அங்கிருந்து சிறிது தொலைவு சென்றால் உள்ளது ஆத்தடி குருசாமி கோயில். இங்கு இரு சிம்மங்கள் மீதுள்ள உருவங்களைப் பதினொன்று சித்தர்கள் என்று கூறுகிறார்கள். சித்தர்கள் பூசைசெய்யும் சிறப்பு இத்தலத்திற்குள்ளது. சித்தர்கள் கோயில் அருகில் நாககன்னிகைகள், செங்கமலை ஐயா, பொன்னு ஐயா, சப்த கன்னிகைகள் சீரிமுகத்தையா, அரிகண்ட ஐயாசிறப்புளியான் திருஉருவங்கள் உள்ளன. இவை அனைத்தும் வெட்ட வெளியில் உள்ளன. கூரை இல்லை.

சற்றுத் தொலைவில் கம்பப் பெருமாள் என்று அழைக்கப்படும் சன்னதி தகரக் கொட்டகையுடன் உள்ளது. புரட்டாசி சனிக்கிழமைகள் வைகுண்ட ஏகாதசி நாளில் இங்கு பெருமளவில் வந்து வழிபாடு செய்கின்றனர்.

மதுரகாளியம்மன் ஆலய முன்புறம் ஐயனார், சோலை முத்துச்சாமி ஆலயம், சோலையம்மன் சன்னதிகளும், நாகர் சன்னதியும் புற்றும் உள்ளன.

பின்புறம் தெற்கே சிறிது தொலைவில் ஊர் சுத்தியான் கோயில் உள்ளது. கோயிலின் மேற்புற மேட்டில் பெரியசாமி ஆலயம் உள்ளது.

**வழிபாடு**

அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில் வாரத்தில் திங்கள், வெள்ளி இரு நாட்களும் மற்றும் பிரதி அமாவாசைமற்றும்



பௌர்ணமி தினங்களில் திறக்கப்பட்டு பூசைநடைபெறுகிறது. திருவிழா மற்றும் சில குறிப்பிட்ட பண்டிகைகளின் போது மட்டும் ஆலயம் திறக்கப்படுகிறது.

காலை 6.30 மணிக்கு சன்னதி திறக்கப்படும் காலை 11 மணிக்கு மேல் அம்மனுக்கு அபிஷேகம் நடைபெறும். பிற்பாடு தங்க கவசம் அணிவிக்கப்படும். இரவு 8 மணி வரை தொடர்ந்து தரிசனம் செய்யலாம். உபயதாரர் இருப்பின் மாலை 6.30 மணி அளவில் தங்க ரத புறப்பாடு நடைபெறும்.

**திருவிழாக்கள்:**

ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் அமாவாசைக்குப் பின்வரும் முதல் செவ்வாயன்று பூச்சொரிதலுடன் தொடங்கி, அதற்கடுத்த செவ்வாய் காப்புக்கட்டி 13 நாட்கள் பெருந்திருவிழா சிறப்புடன் நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொள்கின்றார்கள். இத்திருவிழாவில் மலை வழிபாடு, திருக்கல்யாணம், வெள்ளிக் குதிரை வாகனம், திருத்தேர் முதலியன முக்கிய திருவிழா நாட்களாகும். இத்திருவிழா நாட்களில் ஆலயம் திறக்கப்பட்டு பூசைநடைபெறும்.

**சிறப்பு வழிபாடு:**

மேலும் தமிழ், ஆங்கிலப்புத்தாண்டு நாட்கள், ஆடி 18ம் பெருக்கு, புரட்டாசி நவராத்திரி 10 நாட்கள், ஐப்பசியில் தீபாவளித் திருநாள். கார்த்திகையில் தீபத் திருநாள், மார்கழி மாதப் பிறப்பு, வைகுண்ட ஏகாதசி, தைப் பொங்கல், தைப்பூசம், மாசியில் சிவராத்திரி ஆகிய சிறப்பு நாட்களிலும் ஆலயம் திறக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

இத்திருக்கோயிலின் உபகோயிலாக அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயில் இவ்வூரிலேயே உள்ளது. அதற்கு இரு கால பூசைகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. சிவராத்திரி முதலிய திருவிழாக்களும் நன்கு நடைபெற்று வருகின்றன.

**அன்னை மதுரகாளியின் சிறப்புகள்:**

அன்னை மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். ஒரு முறை தரிசனம் செய்தவர் மீண்டும் மீண்டும் வந்து தரிசனம் செய்து மனநிறைவு பெற்றுச் செல்கின்றனர்.

மலைகளும், ஏரியும், குளமும், தோப்புகளும், வயல்களும் சூழ்ந்துள்ள மனதிற்கினிய சூழலில் ஊரின் எல்லையில் அன்னையின் திருக்கோயில் உள்ளது. எழிலார்ந்த ராஜகோபுரம் அனைவரையும் வருக வருகவென அழைக்கிறது. வடக்கு நோக்கிய சன்னதி. அன்னை வடக்கு நோக்கி அமர்ந்துள்ளாள். நான்கு திருக்கரங்கள் இவற்றில் உடுக்கை, பாசம், சூலம், அட்சய பாத்திரம் ஆகியவற்றை ஏந்தியுள்ளாள், இடது திருவடியை மடித்த நிலையில் வைத்து வலது திருவடியை சிம்மத்தின் மீது ஊன்றி அமர்ந்த திருக்கோலம். திருவடியில் அரக்கன் இல்லாததால் அழிக்கும் தொழிலில் காட்சியில்லை. அருளும் நிலையிலேயே காட்சி.

அடியார்களின் துயர் தீர்த்துக் காக்கின்ற அருள்பொழியும் திருமுக மண்டலம்

பூசைநாட்களில் காலை 11 மணிக்குத் தொடங்கும் அபிஷேகம் பிற்பகல் 1 மணியளவில் தங்கக் கவசம் மற்றும் வைரமாலை அலங்காரத்துடன் மகா தீபாராதனை செய்யப்பட்டு பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படுகிறது.

மகாதீபாராதனைக்கு உடுக்கை அடிப்போர் இருவர் அன்னையையும் பிற தெய்வங்களையும் அழைத்து அன்னையின் பெருமையைக் கூறுகின்றனர். இந்த நேரத்தில் தான் அன்னை பெரியசாமி மலையிலிருந்து கிளம்பி இவ்வாலயத்தில் பிரவேசிப்பதாக ஐதீகம்.

அன்னைக்கு அங்கப் பிரதட்சிணம் அடியார்களால் செய்யப்படுகிறது. மற்றுமொரு சிறந்த பிரார்த்தனை மாவிளக்கு ஏற்றுதலாகும். வெளியில் எங்கும் மாவிளக்கு மாவு தயாரிக்காமல் ஆலய வளாகத்திற்குள் அரிசி கொணர்ந்து ஊர வைத்து இடித்து இங்கேயே மாவிளக்கு மாவு தயார் செய்கிறார்கள். பின்பு அதனுடன் நெய் விளக்கு அன்னை சன்னதியில் ஏற்றித் தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இதற்காக மாவு இடிக்கத் தனியிடம் ஒதுக்கப்பட்டு உரல்களும், உலக்கைகளும் ஆலயம் மூலமாகவே வைக்கப்பட்டுள்ளன. இடிக்க முடியாத பக்தர்களுக்கு கூலிக்கு மாவிடித்துத் தர பணியாளர்களும் உள்ளனர்.

பில்லி, சூன்யம் வைத்த மந்திராவதியை அன்னை அழித்ததால் பில்லி, சூனியம் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகள் இத்தலம் வந்து தொழ விலகிச் சென்று விடுகின்றன. குறைகள் எல்லாம் மனமுருக அன்னை முன் முறையிடக் கரைந்து காணாமற் போய் விடுகின்றன. குழந்தைப் பேறும் கிட்டுகிறது.

அன்னையின் அருள் பெற்று எல்லா கௌரி எனும் நலன்களையும் பக்தர்கள் அடைய வேண்டுகிறோம்.

# வேலும் மயிலும் துணை

(பேராசிரியர். டாக்டர் சரஸ்வதி இராமநாதன்)



வந்த வினையும் வருகின்ற வல்வினையும்

கந்தன் என்று சொல்லக் கலங்குமே!

என்பர். வந்த வினை தீர, எம் பந்தம் மாற, கந்தன் அருள் சேர, சந்த அலைவீச, செந்தமிழ் நூல்கள் தந்தவர் அருணகிரிநாதர்.

"கந்தர் அநுபூதி பெற்றுக்

கந்தர் அநுபூதி சொல்லி

எந்தை அருள் நாடியிருக்கும்

நாள் எந்நாளோ!"

என்றார் தாயுமான சுவாமிகள். திருப்புகழ் விருப்பமொடு செப்பு என்று முருகனே அருள்செய்து "முத்தைத்தருபத்தித் திருநகை" என்று அடி எடுத்துத் தந்தான்.

திருப்புகழ் - மலர்

அலங்காரம் - பழம்

அநுபூதி - விதை

(தத்துவ விதை)

சொற்றொடருடன், தத்துவத்தைப் பக்குவமாகத் தெரிவிப்பது அநுபூதி. அதை எளிமையாக்கித் தருகிறேன். தெய்வத் திருமலைத் திருச்செங்கோட்டில் முருகப் பெருமானின் கையில் கிளியாக இருந்து அருணகிரிநாதர் பாடியதே அநுபூதி என்பர். 51 பாடல்களால் ஆன பக்தி மாலை. செந்தமிழ் சொல் பாவின் மாலைக்காரன் முருகன். ஞானவாசனை வீசும் மணமலர் அநுபூதி. முருகன் சொன்னதைச் சொன்ன கிளியானார் அருணகிரிநாதர்.

இனி, விளக்கம் தொடர்கிறது.

"உருவாய், அருவாய், உளதாய், இலதாய்,

மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்,

கருவாய், உயிராய், கதியாய், விதியாய்

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!"

இது நிறைவான பாட்டு. கடைசிப் பாடல். கண்ணால் பார்க்கிற பொருள்களை விவரிக்க முடியும். எந்தப் பொருளைக் கண்ணால் பார்க்க முடியாதோ அந்தப் பொருளை வார்த்தையால் விவரிக்க முடியாது. பரம்பொருள் பார்க்கவும், விவரிக்கவும் அடங்காத பெரும்பொருள். 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்'. தத்துவம் என்றால் என்ன என்று என்னுடைய மாணவர்கள் கேட்பார்கள். அதாவது தத்துவம் என்றால் பேசுகிறவருக்கும் புரியாமல், கேட்கிறவருக்கும் புரியாமல் பேசுவது தான் தத்துவம் என்று பலர் கூறுகிறார்கள். அதல்ல; இந்த உலக அனுபவத்திலே வார்த்தையால் சொல்ல முடியாதது அதிகம். பச்சைமிளகாய், இஞ்சி, மிளகு, வத்தல் மிளகாய் இவற்றின் காரத்தில், நிறைய வித்தியாசம் உண்டு. இந்த நான்கு காரத்திற்கும் உரிய வித்தியாசத்தை நான்கு பக்க அளவிலே கட்டுரை எழுத முடியுமா? முடியாது. நாம் அனுபவித்ததை வார்த்தையால் சொல்ல முடியாது! எல்லா வற்றிலும் உயர்ந்து, சிறந்து விளங்கும் ஆண்டவனை வார்த்தையால் கூற முடியுமா? இராமாயணப் பாடல் தோள் கண்டார் தோளே கண்டார் என்று சொல்லும். தாள் கண்டவர் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அஃதே என்பது கம்பன் வாக்கு. ஆண்டவனை, அதாவது ஆண்டவனுடைய ஒரு பாகத்தைப் பார்த்தால் கூட ஆண்டவனைப் பார்த்த



அனுபவம் உண்டாகிப் பேச்சுவராது. ஆண்டவன் எப்படி வார்த்தைக்குள் அகப்பட மாட்டானோ, அதே போல் பெரியவர்களைப் பற்றியும் வார்த்தைக்குள் பேசி முடிக்க முடியாது.

''ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ?
ஞானகுரு புகழினை நான் சொல்லப் போமோ?
ஆயிரம் நூல் எழுதிடினும் முடிவும் தாம்
ஐயனவன் புகழினை நான் சுருக்கிச் சொல்வேன்''

என்றார் பாரதி.


பேசிற்றே பேசின் அல்லால் பெருமை ஒன்றும் உணரலாகாது. குற்றமற்றவர்களைத் தவிர மற்றவர்களால் பரம்பொருளை அறிய முடியாது; பேசமுடியாது. முருகப் பெருமானைத் தவிர வேறு எதையும் அறியாத அருணகிரிநாதர் என்ற கிளி பேசிய பாடல் 51 பாடல். அந்த 51 பாடலையும் கொண்டது கந்தர் அநுபூதி. அதற்குப் பிறகு தான் அருணகிரிநாதருக்கு நிறைவு. இறைவனிடம் கலப்பது நிறைவு.

25 வயது வரைக்கும் சாப்பிடுகிற சாப்பாடு உடம்பை வளர்க்கிறது. அதற்குப் பிறகு, வயதானபின் கோளாறு செய்கிறது. நம் உடம்பிலே இனிப்பு அதிகம், உப்பு அதிகம், கொழுப்பு அதிகம் என்றெல்லாம் தெரிவிக்கிறார்கள். நேற்று வரை எந்த உணவுதனை உடல் ஏற்கிறதோ அதை இன்று நம் உடல் ஏற்கவில்லை. இந்த உடம்பு குறைவுள்ளது. நிறைவு இல்லை. குறைக்கப் பட்ட உடம்பு, நம் உடம்பு. எத்தனை அசிங்கம் உள்ளது நம் உடம்பில்! இந்த புண்புலால் உடம்புக்கு நிறைவு வேண்டுமானால் நிறைவோடு சேர வேண்டும். அது தான் பூரணம், பூரணம். பூரணம் என்றால் எடுத்தாலும் குறையாது. போட்டாலும் கூடாது.

பூரணமாயிருக்கிற கந்தப் பெருமானுடன் அருணகிரிநாதர் இணைந்து பாடிய, அருளிய பாடல்தான் இந்தக் கந்தரநுபூதி. அநுபூதி என்றாலே பேசாமை தான். தாகமாக இருந்து தண்ணீர் குடித்து விட்டு ''ஷ்'' என்று சொல்கிறோமே அந்த ''ஷ்''க்கு அர்த்தம் உண்டா? அதே போல் மிகவும் பசியாக இருந்து பின்னர் சாப்பிட்டு விட்டு அப்பாடா என்று சொல்கிறோமே, அந்த அப்பாடாவுக்கு அர்த்தம் உண்டா? கிடையாது. இத்தகு சாதாரண இன்பத்தையே விவரிக்க முடியாது போனால், அநுபூதியை விவரிக்க முடியுமா? பேசா அநுபூதி என்று சொல்லப்படுகிறதே. ஆனால், அருணகிரிநாதர் 51 பாடல்கள் பாடியுள்ளாரே, அப்படியானால் அது எப்படி அநுபூதியாகும்? என்று ஒருவர் கேட்டார். இல்லை; இந்தப் பாடல்கள் அருணகிரிநாதர் பாடவில்லை. முருகப்பெருமான் பாடிய, அருளிச் செய்த பாடல் ஆகவேதான் இது முருகப்பெருமானால், அருணகிரிநாதர் மூலம் அருளிச் செய்த கந்தர் அநுபூதி. அருணகிரிநாதரை கருவியாகக் கொண்டு முருகப் பெருமான் பாடிய பாடல்கள் தான் இவை. இது முருகப் பெருமானுடைய பேச்சு. கந்தர் அநுபூதி பெற்று கந்தர் அநுபூதி சொன்னவர் அருணகிரிநாதர். இந்தப் பாட்டால் அருணகிரிநாதருக்கு ஏதாவது லாபமா? முருகனுக்குத்தான் லாபமா? நமக்கு தான் லாபம். அறிவாளிகள் ஒரு காரியம் செய்தால் அந்த காரியம் தன்னால் நடந்ததென்று நினைக்கமாட்டார்கள்.

திருஞானசம்பந்தர் ஒரு முறை மயிலாப்பூருக்குச் சென்றார். அந்த ஊரில்

சிவனேசச் செட்டியார் என்ற ஒரு பக்தர் இருந்தார். அவருக்கு பூம்பாவை என்ற ஒரு பெண் இருந்தாள். அந்த பெண் பாம்பு கடித்து இறந்து விட்டாள். அந்தப் பெண்ணுடைய சாம்பலைக் குடத்தில் அடைத்து வைத்திருந்தார்கள். திருஞான சம்பந்தர் அவர் வீட்டுக்கு வந்தவுடன் அவர் முன்னால் அந்த குடத்தை வைத்து விபரம் கூறினார் செட்டியார். உடனடியாக சம்பந்தர் பெருமான் பதிகம் பாடினார்கள். பதிகம் பாடி முடித்த உடன் அந்தப் பெண் பூம்பாவை உயிருடன் இருந்தால் எத்தனை வயது ஆகுமோ, அத்தனை வயதுப் பெண்ணாக உருப்பெற்று எழுந்து நின்றாள். "என் பாட்டால் அல்லவா இந்த பெண் எழுந்து வந்தாள்" என்று சம்பந்தர் நினைத்தாரா? இல்லை, அனைத்தும் ஆண்டவனுடைய அருள் என உடனடியாகச் சிவபெருமானுடைய அருளை அவர் நினைத்தார். கண்ணுதல் கருணை வெள்ளத்தை அனுபவித்தார்.



அருணகிரிநாதரும் முருகன் தான் என்னைப் பாட வைத்தான் என்றார். ஆகவே அருணகிரிநாதர் பாடியது நமக்காக. முருகப் பெருமான் நமக்காகப் பாட வைத்தான். இதைத் தினமும் பாராயணம் செய்ய வேண்டும். அருணகிரிநாதருக்கு நிறைவு கிடைத்தவுடன் முருகப் பெருமான் தன்னுடைய திருவடியில் சேர்த்துக் கொண்டாரா? இல்லை. ஏன்?..... பார்ப்போம்.

நல்ல குடும்பம் என்றால் என்ன? வந்த விருந்தாளிக்கு நல்ல விருந்து கொடுத்தால் அதுவே நல்ல குடும்பம். கணவனும், மனைவியும் ஒத்த அன்புடனிருந்தால்தானே விருந்தோம்பல் சிறக்கும்! ஒரு குடும்பத்தில் கணவன் - மனைவி இரண்டு குழந்தைகள் உட்பட மொத்தம் நான்கு பேர். அவர்கள் தங்களுக்கு நாலு பேருக்கு மட்டும் உணவு தயார் செய்து வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் விருந்தினர் ஒருவர் வந்து விட்டார். வீட்டுக்காரர் விருந்தினருடன் சாப்பிட உட்கார்ந்து விட்டார். அவர்களுடன் விவரம் தெரியாத ஒரு குழந்தையும் சாப்பிட உட்கார வைத்து விட்டார்கள். இல்லையென்றால் அது பிடிவாதம் செய்யுமே. விபரம் தெரிந்த குழந்தையைப் பட்டினி போட்டு விருந்தினருக்குச் சாப்பாடு போட்டார்கள். அதே போல் நாராயணன் ஞானியான விபரம் தெரிந்த குழந்தையாகிய நம்மாழ்வாரைப் பட்டினி போட்டார். அவ்வாறு அவரைப் பட்டினிபோட்டுவிட்டு நாராயணன் நமக்கெல்லாம் நம்மாழ்வார் பாடலை, திருவாய் மொழியை விருந்து படைத்தார். அதே போல் முருகப்பெருமான் அருணகிரிநாதரைப் பட்டினி போட்டு திருப்புகழ் பாடவைத்து விருத்தம் பாட வைத்து அநுபூதி பாட வைத்து, நமக்கெல்லாம் விருந்து படைத்தார்.

(தொடரும்)




## விழித்துக் கொள்ளுங்கள்

எழுந்திருங்கள்
விழித்துக் கொள்ளுங்கள்
இனியும் தூங்க வேண்டாம்
எல்லாத் தேவைகளையும்
எல்லாத் துன்பங்களையும்
நீக்குவதற்கான பேராற்றல்
உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது.

# தத்துவ உலகில் ஒரு புரட்சியாளர்!

**நாவுக்கரசர் டாக்டர்.சோ.சத்தியசீலன்**



''தத்துவம் என்பது கலைகளின் ராணி! அது சுவர்க்கத்தின் மகள்'', என்று ஓர் அறிஞன் கூறினான்.

''தத்துவம் பயில்வது ஒருவன் தன்னுடைய மரணப்படுக்கையைத் தயார் செய்து கொள்வதாகும்'', என்று மற்றொரு சிந்தனையாளன் விளக்கம் கொடுத்தான்.

''ஞானத்தின் மீது கொள்ளும் உண்மையான காதல்தான் தத்தவம்'', என்று ஞானி சிசரோ சொன்னார்.

''தத்துவம் என்பது ஒரு தேவதை. அதனுடைய தலை விண்ணிலும் கால்கள் மண்ணிலும் உள்ளன'', என்று ஒரு தத்துவ ஞானி பேசினான்.

மனிதனை மனிதனாக வாழவைக்கும் சிந்தனை எதுவோ அதைவிடப் பெரிய தத்துவம் எதுவுமில்லை என்பதே அப்பட்டமான உண்மை!

நம்பிக்கை இழந்த நடைப்பிணமாக மனித குலம் மாறிக் கொண்டே போகிறதே அதை யார் தடுத்து நிறுத்துவது?

பாரத மண்ணில் தத்துவ ஞானிகளுக்குப் பஞ்சமில்லை!

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ தத்துவஞானிகள் இந்த மண்ணில் தோன்றி மறைந்தனர்.

எத்தனையோ தத்துவங்களை எழுதியும் சொல்லியும் சென்றார்கள். அவர்களில் ஒருவர்தான் வடலூர் வள்ளலார்.

அவர் ஒரு வித்தியாசமான தத்துவஞானி!

மற்ற ஞானிகளெல்லாம் இறைவனருள் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று ஏங்கினார்கள்!

இறைவன் புகழைப் பாடித்துதித்துப் பரவசம் அடைவதற்கே இந்த வாழ்க்கை என்று வாழ்ந்தார்கள் சிலர்!

அவனைத் தரிசித்துப் பரமானந்தம் பெறுவதற்கே இந்த மனிதப் பிறவி என்றார்கள் சிலர்!

ஆனால் வள்ளலார் உலகத்து உயிர்களின் துன்பத்தைப் போக்குவதற்கே என்னுடைய வாழ்க்கை பயன்பட வேண்டுமென்றார்.

''இறைவா! உன்னிடம் நான் கேட்கும் வரம் இதுதான்! உன்னுடைய திருவருளால் எனக்கு வலிமை வேண்டும். எதற்குத் தெரியுமா? உன்னை அடைவதற்கில்லை! உலகத்து உயிர்களின் துன்பத்தைத் துடைப்பதற்கு'' இதை

**''மண்ணுலகத்திலே உயிர்கள் தாம்**
**வருந்தும் வருத்தத்தை ஒரு சிறிது மானினும்**
**கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்**
**கணமும் நான் சகித்திட மாட்டேன்**
**எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால் இசைத்த போதெல்லாம்**
**நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்க நல்வரந்தான் நல்குதல் எனக்கு இச்சைஎந்தாய்.''**

என்று மனமுருகிப் பாடுகின்றார்.

தன்னை இந்த உலகத்திற்கு இறைவன் ஏன் அனுப்பினான் என்று எந்தத் தத்துவ ஞானியும் தெளிவாகச்சொன்னதில்லை!

ஆனால் வள்ளலார் தான் வந்த காரணத்தை, தன் லட்சியத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார்!

**''அகத்தே கருத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்த்திடுதற் கென்றே எனையிந்த**
**யுகத்தே வருவிக்க வுற்றேன் அருளைப் பெற்றேனே''**

என்பது அவருடைய வாக்கு!

மனிதன் மனிதனாக வாழாமல் விலங்காகத் திரிவதற்குக் காரணம் என்ன?

சாதிப்பித்து, வஞ்சனை, சூது, வாது, காமம், குரோதம், மோகம், மதம் மாற்சர்யம், லோபம் என்னும் பேய்கள் எல்லாம் மனித

இனத்தை ஆட்டிப் படைத்து அழிக்கின்றனவே! என்னகாரணம்?

ஒரே காரணம்! மனத்தூய்மை இல்லை! மனம் தூய்மையானால் மாநிலம் தழைக்கும்! மனிதஇனம் செழிக்கும்!

எளிமையான வாழ்வியல் சித்தாந்தத்தை வள்ளலார் வகுத்துத் தந்தார்.

**1. இந்திரிய ஒழுக்கம்**

**2. கரண ஒழுக்கம்**

**3. ஜீவ ஒழுக்கம்**

**4. ஆன்ம ஒழுக்கம்.**

நண்பர்களே! சொற்களைக் கண்டு அஞ்சவேண்டாம்! இவை நான்கும் மிக மிக எளிமையானவை.

**1. இந்திரிய ஒழுக்கம்**

உடலால் தூய்மையாக இருப்பது. குரூரமாகப் பாராதிருப்பது. கொடுஞ் சொற்களைக் கூறாதிருப்பது. தீயனவற்றைக் கேளாதிருப்பது. இவைதான் இந்திரிய ஒழுக்கம்.

**2. கரண ஒழுக்கம்**

மனத்தால் தூய்மையாக இருப்பது. காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் ஆகியவை மனதில் பற்றாவண்ணம் வாழ்வது. அன்பு, கருணை, இரக்கம், தொண்டு, தியாகம் ஆகிய உணர்வுகளை உள்ளத்தில் வளர்த்துக் கொள்ளுதல், பிறருடைய குற்றம் விசாரியாதிருத்தல். இவைதான் கரண ஒழுக்கம்.

**3. ஜீவ ஒழுக்கம்**

எல்லா உயிர்களையும் தம் உயிராகக் கருதுதல். அவ்வுயிர்களுக்கு வரும் துன்பங்களை எவ்வாறேனும் நீக்குதல் சிறப்பாகப் பசித்துன்பத்தைப் போக்குதல் இவைதான் ஜீவ ஒழுக்கம்.

**4. ஆன்ம ஒழுக்கம்**

எல்லா உயிர்களையும் இறைவன் திருக்கோயிலாக எண்ணி அங்கே எழுந்தருளியுள்ள இறைவனை வணங்குதல். இதுதான் ஆன்ம ஒழுக்கம்.

மேற்கூறிய நான்கு ஒழுக்கங்களையும் வள்ளலார் வகைப்படுத்தி நெறிப்படுத்தி மானிட உலகத்திற்கு வழங்கியுள்ளார்.

மெய்யன்பர்களே! மேற்சொன்ன அனைத்தையும் வள்ளலாருக்கு முன் வாழ்ந்த எத்தனையோ ஞானிகள் கூறியிருக்கிறார்களே! வள்ளலார் என்ன புதிதாகக் கூறி விட்டார் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா! அதுதான் உண்மை, இவை அனைத்தும் பழைய தத்துவங்கள் தான். ஒன்றும் புதுமையில்லை! புரட்சியும் இல்லை!

அதை வள்ளலாரே தன்னுடைய சொற்களால் ஒத்துக்கொள்கின்றார். இதோ அவருடைய ஒப்புதல் வாக்குமூலம்.



''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில் யான் ஒருவனன்றோ வகையறியேன் இந்த
ஏழை படும்பாடுனுக்கு திருவுளச்சம்மதமோ!''

முன்னோர் வழியிலேயே வந்தவர் என்பதை அவரே தன் வாக்கால் ஒப்புக் கொள்கின்றார்!

அப்புறம் எப்படி அவரை ஒரு வித்தியாசமான தத்துவஞானி என்றும், புரட்சியாளர் என்றும் கூறுவது?

நியாயமான கேள்வி! உண்மையான சந்தேகம்!

நண்பர்களே! வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் அவர் ஒருவர்தான்! ஐயமில்லை!

புலையையும் கொலையையும் தவிர்க்கச் சொன்னார் புத்தரைப்போல!

சாதிபேதத்தை விலக்கச் சொன்னார் மணிவாசகர், அப்பரடிகள்போல!

மனத்தூய்மையை வற்புறுத்தினார் வள்ளுவரைப் போல!

பசிப்பிணியைப் போக்கச் சொன்னார் மணிமேகலையைப் போல!

எங்கே புதுமை? எதிலே புரட்சி!

என்பார்களே! வள்ளலாருடைய வாக்கு மூலத்தைச் சற்றே திருப்பிப் பாருங்கள்.

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவனன்றோ வகையறியேன்''

''வகையறியேன்'' என்னும் சொல்லைச் சற்று ஊன்றிப் பாருங்கள்!

அதற்கு என்ன பொருள் தெரியுமா?

''என் முன்னோர்கள் சொன்ன அரிய தத்துவங்களைத்தான் நானும் சொன்னேன்! இறைவா! ஆனால் அவற்றை வாழ்வில் எப்படி நடைமுறைப் படுத்துவது என்னும் வகையை அறியவில்லையே! என்ன செய்வேன்? என்பதுதான் அதன் பொருள்!

எத்தனையோ ஞானிகள் தத்துவங்களைச் சொல்லியும் எழுதியும் செல்கின்றார்கள். அவற்றை நடைமுறைப்படுத்தும் சாதனங்களை அவர்கள் தரவில்லை!

ஆனால் வள்ளலார் தாம் சொன்ன வாழ்வியல் தத்துவங்களுக்குச் சாதனங்களையும் தந்து சென்றுள்ளார்.

இந்திரிய ஒழுக்கத்திற்கு ''சமரசசுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தந்து சென்றார். அடியார் திருக்கூட்டத்தில் இருந்தால் இந்திரிய ஒழுக்கம் தானே வரும்!

கரண ஒழுக்கத்திற்குத் ''திரு அருட்பா'' என்னும் அருள் நூலைத்தந்து சென்றார். உளம் உருகிப் பயின்றால் உள்ளத் தூய்மை உண்டாகும்.

ஜீவ ஒழுக்கத்திற்குச் ''சத்திய தருமச்சாலையை'' வடலூர் பெருவெளியில் அமைத்துச் சென்றார், ஒவ்வொரு இல்லமும் தருமச்சாலையாகச் செயற்பட வேண்டும்.


அன்பர்களே! நெருப்பை நீரால் அணைக்க முடியுமே தவிர நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது! ஆனால் வள்ளற்பெருமான் மக்களுடைய பசி என்னும் நெருப்பை சத்திய தருமச் சாலையின் அடுப்பு நெருப்பால் அணைத்துச்சாதனை புரிந்தார்.

நிறைவாக ஆன்ம ஒழுக்கம் நிலைபெறச் சத்திய ஞானசபையை அமைத்தார்.

நம் உள்ளமெல்லாம் சத்திய ஞான சபையாக மாற வேண்டும் என்பதுதான் அவருடைய தனியாத ஆசை!

இப்படி தான் கூறிய தத்துவங்களுக்குச் சாதனங்களையும் தந்து அவற்றை வாழ்வில் நடைமுறைப்படுத்திய தத்துவஞானி, புரட்சியாளர் வள்ளலார் ஒருவரே! அவர் வழி நிற்போம்! வையத்தை வாழ்விப்போம்!

## முக்திக்கு வழி



மும்மல நீக்கமே முத்திக்கு சாதனமாம். அரிசியின் சுபாவமான வெள்ளை நிறத்தை மறைத்த தவிடுபோல் ஆன்மாவின் ஞானத்தை ஆணவ அழுக்கு மறைத்திருக்கின்றது.

அரிசி - ஆன்மா
தவிடு - ஆணவம்
முளை - கன்மம்
உமி - மாயை

எனவே, அரிசிக்குத் தவிடு, முளை, உமி என்ற மூன்றின் தொடக்குளது போல் ஆன்மாவுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலம் தொடக்குண்டு. உலக்கையால் தவிடு, முளை, உமிகளை நீக்குவது போல் குருநாதனுடைய ஞானோபதேசமென்னும் உலக்கையால் மும்மலத் தொடர்பை ஒழிக்க வேண்டும்.

- திருமுருக கிருபானந்தவாரியார்

# பொறாமையில்லாப் பெருமை



முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி

*'' பிறர் மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே! ''*
*-ஸ்ரீ மணவாள மாமுனிகள்*
*(ஆர்த்திப் பிரபந்தம்)*

ஆழமான அர்த்தங்கள் பொதிந்த அற்புதமான சொற்கள்.

செய்தித்தாளில், நாட்டின் ஏதோ ஒரு மூலையில் மும்பையிலோ, கோல்கத்தாவிலோ சாதாரணமான ஒருவன் திடீரென்று மிகப் பெரிய கோடீசுவரனாகி விட்டான் என்ற செய்தியைப் படித்தால் எந்த உணர்வும் ஏற்படுவதில்லை. ஆனால், பக்கத்து வீட்டுக்காரனோ, கூடப் பிறந்த அண்ணனோ, தம்பியோ, பெரிய பணக்காரனாகிவிட்டான் என்று தெரிந்ததும் மனதிலே பொறாமை முளைத்துப் பரவி, வெடித்து, முழுவதுமாக ஆட்கொள்கிறது.

ஜூலியஸ் சீசர் என்கிற ரோமாபுரி வீரன் யுத்தத்திலே வெற்றி அடைந்து, பெரும் புகழ் பெற்று, மக்களின் அன்புக்குப் பாத்திரமாகிறான். அதுவரை அவனிடம் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களே அவன் புகழைக் கண்டு பொறாமை கொண்டு, சதி செய்து, அவனை முடிசூட்டு விழாவின் போது கொடூரமாகக் கொன்று விடுகிறார்கள். மிக நெருங்கிய நண்பன் தன்னைக் குத்துவதைக் கண்ட சீசர், ''நீயுமா ப்ரூடஸ்'' என்று கூறி மனமுடைந்து கீழே விழுந்து இறக்கிறான்.

பொறாமை என்பது உணர்வோடு இருந்தாலும் பரவாயில்லை. அந்த உணர்வு சுடு சொற்களாக தூஷணையாக வெளிவரும் போதும், தகாத செயல்களாக மாறும் போதும் தான் மனிதனின் மிருகத்தனம் வெளிப்படுகிறது.

ஒருவரின் வளர்ச்சியைக் கண்டு நாமும் அப்படி வளரவில்லையே என்று ஏங்குவது பொறாமையாகாது. ஆனால், அவர் வளர்ச்சிக்கு ஏதோ ஒரு குற்றம் கற்பித்து, அவர் மீது வசைபாடுவதுதான், அசூயை அல்லது பொறாமை ஆகும்.

பொறாமையினால் தூஷிப்பவர்களை எப்படித் திருத்துவது?

குருபரம்பரா ப்ரபாவத்தில் சுவையான ஒரு சம்பவம்.

ஸ்ரீநம்பிள்ளை பகவத் விஷயம் அருளிச் செய்து கோஷ்டி கலைந்து போகும்போது, அங்கே வந்த மன்னன், போகின்ற பெருந்திரளைப் பார்த்து, ''நம் பெருமாள் திருவோலக்கம் கலைந்ததோ? நம்பிள்ளை கோஷ்டி கலைந்ததோ?'' என்று வியப்புடன் கேட்டான். அவ்வளவு பெருமை வாய்ந்தது நம்பிள்ளைகாலஷேப கோஷ்டி.

ஸ்ரீமுதலியாண்டான் திருப்பேரனார், கந்தாடையாண்டான் குமாரர், கந்தாடை தோழப்பர், நம்பிள்ளையுடைய பெரு மதிப்பையும், புகழையும் வைபவத்தையும் கண்டு அசூயைக்கு ஆட்பட்டார். ஒரு நாள் பெருமாள் சன்னதியில் பெருமாளை சேவித்துக் கொண்டிருக்கும்போது, நம்பிள்ளை பெருந் திரளான சிஷ்ய பரிவாரங்களுடன் அங்கு எழுந்தருள, தோழப்பர், பிள்ளையுடைய பெருமையைக் கண்டு பொறுக்க முடியாமல், காரணமின்றி சீறி பகவத் சன்னதியிலேயே, அவரைப் பலவாறாக நிந்தனை செய்து தீர்த்தார். அதைக் கேட்ட நம்பிள்ளை, பதிலேதும் கூறாமல் பெருமாளைச் சேவித்து விட்டுச் சென்றார்.

இந்தச் செய்தியைத் தோழப்பரின் தேவிகள் கேள்விப்பட்டு, மிகவும் வருந்தி, தங்கள் திருமாளிகையில் செய்ய வேண்டிய கைங்கர்யங்களைச் செய்யாமல் விட்டு விட்டுக் கிடக்க, அப்போது பெருமாளை சேவித்து விட்டுத் திரும்பி வந்த தோழப்பர் வழக்கமாக அன்புடன் தன்னை வரவேற்றுக் கைங்கர்யங்கள் செய்யும் தேவிகள் வராமல் இருக்கவே, ''உன்னைத் திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து நீஎன்னை அன்புடன் வரவேற்று வந்தாய். இன்று மட்டும்

அலட்சியமாக இருப்பதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்.

தேவிகள் சொன்ன பதில் :: ''ஸ்வாமி ! ஆழ்வானின் திருவவதாரம் என்பது போல, பெருமாளுக்கு உயிராக உள்ள நம்பிள்ளையை, பெருமாள் சன்னதியிலேயே நா கூசாமல் பலவிதமாக தூஷணை செய்ததுமல்லாமல், இப்படிச் செய்தோமே என்கிற வருத்தம் சிறிதுமின்றி வாழும் உம்மோடு எனக்கென்ன சம்பந்தம்? பாகவதர்களை நிந்தனை பண்ணினவர்களை ஒருக்காலும் மன்னிப்பது இல்லை என்று பெருமாள் தாமே அருளிச் செய்த திருமுகப் பாசுரம் அறிந்தும், அறியாதவர் போல் இருக்கிற உம்மோடு எனக்கு சகவாசம் கூடாது; ஆகையாலே, நிலம் பிளந்தால் இழையிட ஒண்ணாதாப் போலவும், கடலுடைந்தால் கட்ட ஒண்ணாதாப் போலவும், மலை முறிந்தால் தாங்க ஒண்ணாதாப் போலவும், அநுதாபம் பிறவாத பாகவத அபசாரம் தீர்த்துக் கொள்ளக் கூடாதீரே ; ஆன பின்பு நான் என்னிஷ்டத்திலேயிருந்து ஈடேறிப் போகிறேன்'' என்று கூற, தோழப்பரும் பெரிய வித்வானாகையாலும், திருவம்சபிரபாவத்தாலும், அசூயையால் வந்த திருவுள்ளத்தின் கலக்கம் தீர்ந்து, தெளிவு பெற்று, தேவிகளைப் பார்த்து, ''நீசொன்னதெல்லாம் சரியே! நான் தப்பு செய்து விட்டேன். இனிமேல் என்ன செய்வது?'' என்று கேட்க, தேவியாரும், ''ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடாதே. கெடுத்த இடத்தே தேடிக் கொள்ளீர். பரம தயாளுவான நம்பிள்ளை திருவடிகளிலே சென்று சேவித்து அபராதக்ஷாமணம் பண்ணிக் கொண்டு (குற்றங்களுக்கு மன்னிப்புக் கோரிக் கொண்டு) அவர் க்ருபை பண்ணி அருள



ஈடேறீர்'' என்று கூற, தோழப்பரும், தேவிகளும் நம்பிள்ளை திருமாளிகை செல்லப் புறப்பட்டனர்.

இதற்கிடையில், நம்பிள்ளை தம்முடன் வந்திருந்த சிஷ்யர்களை அனுப்பிவிட்டு, பகல் முழுவதும் அமுது செய்தருளாமல் மாலை வந்ததும் அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, தன்னந்தனியாக, தலையிலே முக்காடிட்டுக் கொண்டு, தோழப்பர் திருமாளிகை வாசலிலே சென்று அங்கேயே கண்வளர்ந்தருள, தோழப்பரும் தேவியரும் நம்பிள்ளை திருமாளிகைக்குச் செல்வதற்காகத் தங்கள் திருமாளிகைக்கு வெளியே வந்தபோது வாசலில் ஒருவர் வெள்ளை முக்காடிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, ''இங்கு ஆர் கிடக்கிறார்?'' என்று கேட்க, நம்பிள்ளையும், ''அடியேன் திருக்கலிக்கன்றி தாஸன்'' என்று கூற, தோழப்பர் திகைத்துப் போய் நம்பிள்ளையைப் பார்த்து, ''நாம் பெருமாள் சன்னதியிலே உம்மைக் கோபத்துடன் பேசியதனால் வந்திருக்கின்றீரோ?'' என்று வினவ, நம்பிள்ளை, ''அடியேன் கோபம் கொள்ளவில்லை. பெரிய பெருமாள் சன்னதியிலே, முதலியாண்டான் திருப்பேரரான தேவரீர் திருவுள்ளம் கலங்கும்படி நடந்து கொண்ட மகாபாவியான அடியேனுக்கு, தேவரீர் திருமாளிகை வாசலைத் தவிர வேறு கதியில்லை என்று வந்து கிடக்கிறேன்'' என்று பதிலளித்தார்.

நம்பிள்ளையிடம் மன்னிப்புக் கேட்பதற்காக புறப்பட்டிருந்த தோழப்பர், இந்தப் பதிலைக் கேட்டதும் நம்பிள்ளையின் தன்னடக்கத்தையும் உயர்ந்த பண்பையும்

கண்டு, மனம் மிகவும் நொந்து போய், நம்பிள்ளையை வாரியெடுத்து அணைத்துக் கொண்டு, ''இப்படியும் ஒரு பண்பா! ஸ்வாமி! இவ்வளவு நாட்கள் தேவரீர் ஒரு சில பல பேருக்கு ஆசார்யன் என்றிருந்தேன். இப்போதுதான் தெரிந்து கொண்டேன், நீரே உலகுக்கெல்லாம் ஆசார்யன்'' என்று மிகுந்த உவப்புடன் கூறி, நம்பிள்ளைக்கு ''லோகாச்சார்யர்'' என்ற திருநாமம் சார்த்தி அருளினார்.

ஆக, நம்மீது அசூயை கொண்டு தூற்றுவாரிடம் நாம் எப்படி நடந்து கொண்டு அவரைத் திருத்திப் பணி கொள்வது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

குணங்களையும் குற்றமாகக் கொள்வதே அசூயையாதலால், அந்தத் தீய குணத்தை வென்றவர்கள் உலகில் தேடிப் பிடிக்க வேண்டிய நிலையிலுள்ளார்கள். உலகில் சகல விதமான வியாதிகளுக்கும் மருந்துண்டு; அசூயை எனும் வியாதிக்கு மருந்தே கிடையாது.

ஸ்ரீவேதாந்த தேசிகர், '' ஸங்கல்ப சூர்யோதய''த்தில் அருளியுள்ளது போல, அசூயைதேவி சோர்வு, சோம்பலால் உறங்கிப் போனால்தான் பகவானே குணசாலி என்று பேர் வாங்க முடியும்; அந்த அசூயாதேவி உறங்காதவரை பகவானாலும் குற்றமற்றவன் என்கிற பெயர்பெற முடியாது.

தோஷம் என்பது சிறிதுமில்லாமலும், எல்லை கடந்த திருக்குணங்களுக்கும் உறைவிடமான ஸ்ரீராமபிரானையே சிலர், பெண்ணைக் (தாடகா வதம்) கொலை செய்தான் என்றும், வாலியை மறைந்திருந்து கொன்றான் என்றும் வசைகூறுகின்றார்கள்.

குணக்கடலான இராமனுக்கே இக்கதி யென்றால் குணங்கள் கொஞ்சமும், குற்றங்கள் அதிகமாகவும் இருக்கும் நம்மைப் பார்த்து உலகம் வசைகூறுவது வியப்பல்ல.

குற்றங்களையே குணங்களாகக் கொள்வது வாத்ஸல்யம். இது அசூயைக்கு எதிர்த்தட்டு. இதைத் தான் ஸ்ரீ நம்பிள்ளை, தோழப்பருக்கு எடுத்துக்காட்டினார்.

''எல்லாம் அவனருள். அவன் திருவுள்ளத்தின்படி நாம் ஒவ்வொருவரும் இயங்குகிறோம்'' என்ற எண்ணம் உறுதியாக இருந்துவிட்டால், பொறாமை குணம் முழுவதுமாக நம்மை விட்டு விலகிப் போகும். மாமுனிகளின் சொல்லுக்கும் பொருள் கிடைக்கும்.

# இம்மாதப் பாராயணப் பாசுரம்

எந்தை தந்தை தந்தை தந்தை தம்
மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கி
வந்து வழிவழியாட் செய்கின்றோம்
திருவோணத் திருவிழவில்
அந்தியம்போ திலரியுருவாகி
அரியை யழித் தவனை
பந்தனை தீரப்பல்லாண்டு
பல்லாயிரத்தாண் டென்ற பாடுதுமே.

பெரியாழ்வார் திருமொழி திருப்பல்லாண்டு

# கல்வெட்டுகளில் காணப்படும் ஒப்படைக் கிளவி வாசகங்கள்

இறையருள் உறைந்துள்ள திருத்தலங்களிலெல்லாம் நாகரீகம் தொடங்கிய நாள் முதலாய் திருக்கோயில்களை அமைத்து வழிபட்டு வருகின்றோம். குடைவரைக் கோயில்கள் முதல் கற்றளிக் கோயில்கள் பலவும், பிரகாரங்கள், விமானங்கள், கோபுரங்கள் என விரிந்து பரந்து திருக்கோயில்கள் தோற்றமளிக்கும் வரலாறு வியந்து போற்றத்தக்கனவாகும்.

கி.பி. 7ம் நூற்றாண்டிலும், அதற்கு முற்பட்ட காலங்களிலும் கோயில்களின் நிலையை விளக்கும் அப்பர் தேவாரத்தில் திருத்தாண்டகத்தில், பெருங்கோயில், மாடக்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என எண்வகை கோயில்கள் இருந்தன என்பதை அப்பர் சுட்டுகின்றார். தமிழர் தம் வாழ்வும் வளமும், பிரிக்க இயலாதவாறு திருக்கோயில்களுடன் பிணைந்தே வளர்ந்திருக்கின்றன.

கி.பி. 600ல் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னன், காஞ்சியைச் சுற்றி கோயில்கள் எழுப்பியுள்ளான். கி.பி. 610 - 640 ல் மகேந்திரவர்ம பல்லவன் முதலான பல்லவ மன்னர்கள் குன்றுகளைக் குடைந்து கோயில்கள் எழுப்பியுள்ளனர். இராசஇராசசோழன் தஞ்சைபெரிய கோயிலையும், கி.பி. 1025ல் இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலையும் கட்டினர். அவர்களுக்குப் பின்னர் பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும், பல திருக்கோயில்களை நிர்மாணித்துள்ளனர். இவைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம், அரசர்கள் இறைவன்பால் கொண்ட மாளாப் பற்றினாலும், அவர்கள் இறையருளைத் தாமே அறிந்துணர்ந்ததாலுமேயாகும்.

பராக்கிரம பாண்டியன் இறைவனது ஆணையை ஏற்று திருக்கோயில் கட்டியதை பின்வரும் கல்வெட்டின் மூலம் அறியலாம்

**"அன்பினுடன்சகாப்தம்ஆயிரமுந்நூற்று அறுபது எட்டு அதன்மேல் வைகாசித் திங்கள் மண்டியதி ஈரைந்தில் பூருவபக்கம் மருவுதசமியில் வெள்ளி வாரம் தன்னில் மின்திகழ் உத்தரநாள் மீனத்தில் வாகைவேல் அரிகேசரி பராக்கிரம மகீபன் தென்திசையில் காசி நகர்க் கோயில் காண சென்றுநின்று கர்ஷணை தான் செய்வித்தானே"**

பார்போற்றும் மன்னர்கள் ஊர்தோறும் திருக்கோயில்களை நிர்மாணித்ததோடல்லாமல், நாள்தோறும் இறைவனுக்கு அமுது படைக்கவும், காலந்தவறாது நிரந்தர நிதியாதாரங்களை வழங்கியுள்ளதோடு, அவைகளைச் சாசனங்களாக கல்வெட்டுகளில் பதித்தும் சென்றுள்ளனர். திருக்கோயில்கள் வழிபாடு தவறாது நடைபெறுவதற்கு நம் முன்னோர் காட்டிய அக்கறை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இறைவனுக்கு மட்டுமின்றி அடியார்களுக்கும், வறியோருக்கும், தான தர்மங்களைத் தவறாது மேற்கொள்ளவும் அறக்கொடைகளை ஏற்படுத்திச் சென்றுள்ளனர். இதோ அச்சாசனங்களில் சில

"பூமி தானத்திலும் சிறந்த தானம் இல்லை. இருந்ததும் இல்லை. இருக்கப்போவதுமில்லை. அதனை அபகரிப்பதினின்றும் உயர்ந்த பாவம் இருந்ததுமில்லை, இருக்கப்போவதுமில்லை. எந்த எந்த அளவு பூமியோ அந்த அந்த அளவு பலன். தான் கொடுத்ததோ பிறன்கொடுத்ததோ எதுவாயினும் அபகரிக்கும் ஒருவன் அறுபதிநாயிரம் வருஷம் மலத்தில் புழுவாக பிறந்து உழல்வான். (இரண்டாம் நந்தி வர்மன், காசாக்குடிச்செப்பேடு கி.பி.754)"

"இதுகாத்தூட்டுவான்அடிஎம்தலைமேலந" (கி.பி.798)

" இத் தருமம் ரக்ஷித்தார் ஸ்ரீபாதம் என் தலைய் மேலது" (கி.பி. 849)

" இத் தன்மம் ரக்ஷிப்பார் அடிப்பொடி என் தலைமேலந" (கி.பி. 864)

" இது அன்றென்றார் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக் காதமும் செய்தார் செய்த பாவத்துபடுவான்" (கி.பி. 885)

"இத் தர்மத்தை வழுவாமேச் செலுத்தி ரக்ஷித்தால் அஸ்வமேதம் செய்த பலம் பெறுவார்." (கி.பி.1206, திருவண்ணாமலை)

" இந்த தன்மத்திற்கு யாதாமொருவன் விக்கினம் பண்ணினவன் கெங்கைகரையில் காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலும் தேவப்பிராமணரைக் கொண்ண தோஷத்திலும் தன் மாதா பிதாவைக் கொண்ண தோஷத்திலும் போகக் கடவராகவும்" (கி.பி. 1672)

" இந்த தற்மத்தை யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணிந பேர்கள் காசியிலேயும், கங்கைகரையிலும், ராமேசுவரத்தில் தனுஷ்கோடியில் கோடி சிவலிங்கம் பிரதிஷ்டையும் கோடி விறுமம் பிறதிஷ்டையும்


விஷ்ணு பிறதிஷ்டையும் கோதானம் பூதானம் கன்னியாதானமும் பண்ணின பலனை பெருவாராகவும்.'' (கி.பி. 1796)

இச்சாசனங்களில், அவர்கள் தெரிவித்துள்ள செய்தியும், வாசகமும் அக்கொடைகள் மற்றும் கொடை தொடர்பான சொத்துக்களின் மேலாண்மை உள்ளளவும் பிசகாது நெறியோடு நிர்வகிக்க வேண்டுமென்ற ஆர்வமும், ஆவலும் இத்தலைமுறையினர் அவசியம் அறிந்து கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

மேற்கண்ட சாசனங்கள் கொடை தந்த பெருந்தகையின் உளப்பாங்கை மட்டுமின்றி, இத்தருமங்ளை முறையாகச் செய்பவருக்கு பலனும், புண்ணியமும் பட்டியலிட்டும், தவறாக நிர்வகிப்போரையும், அவ் அறச்செயல்களை நிறைவேறாது தடுப்பவரையும், சுயலாபத்திற்காக தருமச் சொத்தை அபகரிப்போரையும் எவ்வளவு கடுமையாகச் சாடி எச்சரித்துள்ளனர் என்பதோடு தவறு செய்வோருக்கு தண்டனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் ஆட்சி முடிந்து, மக்களாட்சி மலர்ந்த பின்பும், சமுதாயத்தில் திருக்கோயில்களின் பங்கு சற்றும் குன்றாது மென்மேலும் வளர்ந்தோங்கியே வருகிறது. திருக்கோயில்களைச் சார்ந்த தான தருமங்களும், அறக்கொடைகளும் அது போன்றே வளர வேண்டும். ஏற்கெனவே தான தருமங்களுக்கெனவும், திருக்கோயில்களுக்கெனவும் விடப்பட்ட சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்திடுவதும், முறையாக வருவாய் ஈட்டி அறக்கொடையினைத் திறம்பட நடத்துவதும் நமது முக்கியமான கடமையாகும். ஆலய சொத்துக்களால் பயன் அடைவோர் அதனைத் தருமமாக வழங்கியவரின் நோக்கத்தையும், திருக்கோயில் தம்மால் பயன் அடைகின்ற பேருண்மையையும் முழுமையாய் உணர்ந்து, பக்தியுடன் தமது பங்களிப்பான குத்தகை, வாடகை ஆகியவற்றை வழங்கிட வேண்டும்; நிர்வகிப்போரும் இவற்றை முறையாக நிர்வகித்திட வேண்டும். தவறிழைப்போர் ஆக்கியோரின் சாபத்திற்கு இலக்காவர் என்று சாசனங்களில் தெரிவித்துள்ளதைக் கவனிக்க வேண்டும்.

# ஆலயம்



ஆலயம் செல்வது சாலச் சிறந்ததாம்
ஆலய ஈசன் தொழு.

ஆலயம் சென்று நாம் ஈசன் தொழுவதே
காலம் அறிந்த செயல்.

ஆலய ஈசன் அனைவரின் வாழ்க்கைநலன்
சாலப் படைத்து விடும்.

ஆலய வாசம் புதுமைப்புரட்சி தன்
கோலங்கள் செய்து விடும்.

சகலரும் ஒன்றென்ற சமநீதி தந்தே
பகையெலாம் போக விடும்

பகலவன் போல்ஒளி பாய்ச்சியருள் தந்தே
பகல்போல் ஒளிரச் செயும்.

ஆலயத் தூய்மையால் அன்புவழி
நேர்மையெனும் பாலமுதுப் பொங்கல் இடும்.

உண்மை பிறப்பிடம் ஊருலகில் ஆலயத்
தன்மைகள் பெற்றுத் தரும்.

ஆலயம் யாவிலும் ஆன்மபயன்
உண்டென்க; சீலம் அறிந்து நட.

காலைமாலை சென்று கடவுளருள்
வேண்டியே ஆலய ஈசன் தொழு.

அருட்கவிஞர்
இரா.செல்வராசனார்

# அம்மாவான ஆசான்

எம்.என்.ஸ்ரீனிவாசன்

வைணவப் பெரியார்களில் நடாதூரில் அவதரித்த வரதகுரு (கி.பி.1165) என்ற பெரியார் பகவத் ராமானுசர் அமைத்திட்ட 74 ஸிம்மாஸனாதிபதிகளில் ஒருவர். இப்பெருந் தகையாளரை காஞ்சிப் பேரருளாளன் ''அம்மா'' என்றழைத்த நிகழ்ச்சியைச் சற்று பார்ப்போம்.

இவர் காஞ்சிப் பேரருளாளன் சன்னதியில் தர்ம கர்த்தாவாக இருந்தார். காஞ்சிப் பேரருளாளனுக்கு தினமும் அர்த்த ஜாம பூஜா வேளையில் பால் நிவேதனம் செய்யப்படுவது வழக்கத்தில் இருந்து வந்தது. ஒரு நாள் இவர் வரதராஜனின் சன்னதியில் இருந்தபோது பெருமாளுக்கு பால் நிவேதனம் செய்திட கோயில் பரிசாரகர் மிகச்சூடான பசும்பாலை சன்னதிக்கு எடுத்து வந்து அர்ச்சகரிடம் கொடுத்தார். அர்ச்சகரும் பாலை பெருமாளுக்கு நிவேதனம் செய்ய முற்பட்டார். இதைக்கண்டு பதைத்துப் போன வரதகுரு ஸ்வாமிகள் ''இவ்வளவு சூடான பாலை நிவேதனம் செய்தால் எம்பெருமான் திருப்பவளச் செவ்வாய்க்கு தீங்கு நேராதோ!'' என்று பயந்து அர்ச்சகரிடமிருந்து பாலை வாங்கி ஆற்றி உஷ்ணம் தணிந்தபின் அர்ச்சகரிடம் கொடுத்தார். பால் நிவேதனம் ஆனதும் சன்னதியில் வரதராஜப் பெருமானின் பெருங்குரல் வரதகுருவை நோக்கி ''எம் அம்மாவே'' என ஒலித்தது. இந்த சம்பவத்தில் 'ஒரு தாயின் பரிவைக் கண்டு மகிழ்ந்தேன் என அசரீரியாக ஒலித்தது. அன்று முதல் வரதகுரு என்ற அந்தப் பெரியவர் நடாதூர் அம்மாள் என்றே அழைக்கப்படலானார்.



இவர் வாழ்க்கையில் திருவேங்கட முடையானும் ஒரு திருவிளையாடல் புரிந்தான். நடாதூர் அம்மாள் தன் சிஷ்ய கோஷ்டியுடன் திருமலை யாத்திரை மேற்கொண்டார். நடைப்பயணம் களைப்பு காரணமாய் அனைவருக்கும் பசி மயக்கம் ஏற்பட்டு மேற்கொண்டு திருமலை ஏறி பெருமாளை தரிசிக்க முடியுமா என்ற சோர்வை அடைந்தனர். அச்சமயம் ஒரு பிரம்மச்சாரி பையன் ஒருவன் வந்து நடாதூர் அம்மாளிடம் தயிர்சாதம் அடங்கிய மூட்டையை கொடுத்துவிட்டுச் சென்றான். பசியாறியவர்கள் திருமலை சென்று திருவேங்கடமுடையானை தரிசித்தபோது நடாதூரம்மாளுக்கு பிரம்மச்சாரியாக வந்த திருவேங்கடத்தான் காட்சி தந்தார்.

இப்படி பல பெருமைகளைக் கொண்ட இந்த ஆசானுக்கு தனியாக அவதார தலத்தில் திருமேனி கிடையாது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருவெள்ளரையில் எங்களாழ்வான் என்ற ஆசானின் திருவடியில் (விக்ரஹத்தில்) சிறிய திருமேனி அமைந்து உள்ளது. மற்றும் சென்னையில் ஸ்ரீ வரதராஜஸ்வாமி திருக்கோயிலில் (227, பிராட்வே, சென்னை, பிராட்வே தியேட்டர் எதிரில்) நடாதூர் அம்மாளின் திருவுருவச்சிலையைத் தரிசிக்கலாம். 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான இத்திருக்கோயிலில் தரிசனம் செய்தால் மகானை தரிசனம் செய்த பலனைப் பெறலாம்.



# தோழமை நெறி தந்த சுந்தரர்

அழ.முத்துப் பழனியப்பன் எம்.ஏ.,பிஎல்.,

சுந்தரமூர்த்தி நாயனார்தான் பெரிய புராணத்தின் பாட்டுடைத் தலைவர் என்பது வெளிப்படை. மூவர் முதலிகளில் சுந்தரர் இளையவர், இறைவனுக்கு இனியவர், அவரைத் தோழராகப் பெற்றவர். இறைவன் நம் ஆண்டான் மட்டும் அன்று அவர் எம் தோழனுமாம் என்று கூறி தோழமை நெறி என்ற புது நெறியைத் தமிழ்ப் பக்தி உலகத்துக்கு அளித்தவர்.

''.... என்னுடைய தோழனுமாய், யான் செய்யுந் துரிசுகளுக்கு உடனாகி..'' என்று அவரே பாடுவார்.

''உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தனம்..'' என்று இறைவனே குறிப்பிட்டான். அவர் தம்பிரான் தோழர் என்றே அழைக்கப்பட்டார். இவர் பதிகங்கள், சைவத் திருமுறையில் ஏழாவதாக இடம் பெற்றுள்ளன.

மூவர் முதலிகளில், முதல்வர்களான, ஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசர் பெருமானும் இவருக்கு முன்னமே வாழ்ந்தவர்கள். அயல் மதத்தை அழித்து, சைவப் பயிரைத் தழைக்கச் செய்த பெருமை அவர்க்குண்டு. அவர்தம் காலம் போராட்டம் மிகுந்த காலம். அப்பரடிகள் மகேந்திர மன்னனையும் எதிர்த்து நின்று வென்றார். சம்பந்தப்பிரான் பாண்டியனைச் சார்ந்து நின்று சமணர்களை வென்றார். ஆகவே, அவர்கள் காலம் போராட்டக் காலம். சுந்தரர் காலம் அமைதியான காலம். சைவப் பயிர் தழைத்துச் செழித்திருந்த காலம். பெரியபுராணம், சைவ வரலாற்றின் மணிமுடி.

பெரியபுராணம் கூறுவது இறைவனைப் பற்றியவை அன்று, மனிதரைப் பற்றியவை. மனிதராய்ப் பிறந்தோர் செயற்கரும் செயல் செய்தல் பெரிது, ஆகவே அவர் பெரியவர் என்பது சாறும். ஆகவே அது பெரியவர் புராணம், பெரியபுராணம் என்றழைக்கப்பட்டது. இதைப் பாடியருளிய சேக்கிழார் பெருமானும் பெரும்புலவர்; இன்றைய ஒரிசா முதல் இலங்கை ஈறாக விரிந்து பரந்திருந்த சோழப் பேரரசின் பிரதம அமைச்சர். ஆகவே அவருக்குச் செய்திகள், தகவல்கள் எளிதாகக் கிடைத்தன. ஆகவே பெரிய புராணம் ஒரு வரலாற்றுக் காப்பியம். கற்பனையன்று.

செயற்கரும் செயல் செய்த அப்பெரியவர்களை சேக்கிழார் பாடினார். அது பெரியவர்களின் கதை. கதைகளாகப் பாடினாலும் சுவையிருக்காது. காப்பியமாகப் பாடவேண்டும். காப்பியமாயின், காப்பியத் தலைவர் ஒருவர் வேண்டும். மூவர் முதலிகளில் இளையவரான சுந்தரரையே, இக்காப்பிய நாயகனாக்கினார்.

மூவர் வரலாற்றிலும், சுந்தரர் வரலாறு சுவைமிக்கது. அவருக்கு நடைபெற இருந்த ஒரு திருமணத்தை இறைவனே வந்து தடுத்து நிறுத்தினான். ஆட்கொண்டான், பாடச் சொன்னான். இதைச் சுந்தரரே, தமது தேவாரத்தில் பல இடங்களிற் குறிப்பிடுவார்.

**''வெண்ணெய் நல்லூரில்**

**அற்புதப்பழ ஆவணங்காட்டி**

**அடியனாய் என்னை ஆளது**

**கொண்ட நற்பதத்தை..''**

**...திருநள்ளாற்றுப்பதிகம் 6ம்பாடல்**

''ஆலுமறை சூழ் கயிலையின் கணருள் செய்த
சாலு மொழியால் வழி தடுத்தடிமை கொள்வான்''

என்பார் சேக்கிழார்.

இது நடந்த கதை. இறைவன் மணந்தவிர்ந்தபுத்தூர் என்று இப்போது வழங்கப் படும் சிற்றூரில் இருந்து வெண்ணெய் நல்லூருக்கு நடந்து வந்த போது அணிந்திருந்த இறைவனுடைய பாதுகைகள் இப்போதும் வெண்ணெய்நல்லூர்ச் சிவாலயத்தில் உள்ளன.

இக்கட்டுரையாசிரியர், ஐயுற்று, அக்கோயில் சிவாச்சாரியரை வினவியபோது, அவர், தம்முடைய தாத்தா காலத்துக்கும் முன்னரே, இத்திருவடிகள், கருவறையில், இலிங்கத் திருமேனிக்கு மேற்புறம், ஒரு துணியில் கட்டி வைக்கப்பட்டு, வழிபாடு செய்யப்பட்டதென்றும், தம் காலத்தில், அவற்றை எடுத்து, அனைவரும் காணும் வண்ணம், கண்ணாடிப் பேழையுள் வைத்திருப்பதாகத் தெரிவித்தார். இத்திருவடி மேற்படி கோயில் அர்த்த மண்டபத்தில் வழிபாட்டில் உள்ளது.

பின்னர் சுந்தரருக்கு, இரண்டு திருமணங்கள் நடைபெற இறைவனே காரணம் ஆகின்றார். இதை, 'பன் மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே' என்பார் சுந்தரர். பரவையாருடன், ''வதுவை தகு நீர்மையினால் நிகழச்செய்தார்''.

அம்மட்டும் அன்று:

சங்கிலியார் என்ற பெண்ணைச் சுந்தரர் திருவொற்றியூரில் திருமணம் செய்து கொள்ள இறைவன் திருவிளையாடல்கள் புரிகின்றான். சங்கிலியார் கனவில் சென்று திருநாவலூரனாக சுந்தரரை மணந்துகொள் என்று கூறுகின்றார். சங்கிலியார். தம்மை, அவர் பிரியமாட்டேன் என்று உறுதி கூறுமாறு கேட்கின்றார். சுந்தரரும் அவ்வாறே உடன்பட்டு, இறைவனிடம், நான் உறுதி கூறும்போது, நீகோயிற் கருவறையில் இருக்கவேண்டாம்; தலத்தில் உள்ள மகிழ மரத்திற்குச் சென்றுவிடுமாறு வேண்டுகிறார். இறைவனும் உடன்படுகிறார். அதேசமயம் சங்கிலியார் கனவில் தோன்றி, ''சுந்தரனிடம் சத்தியத்தை மகிழமரத்தடியில் செய்து தருமாறு கேட்குமாறு கூறுகின்றார். சுந்தரர் வேறு வழியின்றி மகிழ மரத்தடியில் சத்தியம் செய்து, சங்கிலியாரை மணக்கிறார். ''இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் எய்துவித்தார்'' என்பார் சுந்தரர்.

சத்தியத்தைப் பொய்யாக்கியமையால், சுந்தரருக்கு இரண்டு கண்களும் குருடாகின்றன. பின்னர் கருணை கொண்டு, கைத்தடி கொடுக்கின்றார் இறைவன். பின்னர் ஒரு கண் பார்வை மட்டும் வழங்குகின்றார். திருவாரூரில்தான் இரண்டு கண்களுக்கும் ஒளி வழங்குகின்றார்.

அதுமட்டுமல்ல, சுந்தரருக்காக, ஒரு பெண்ணிடம் - பரவையாரிடம் இரண்டு தடவை திருவாரூர் வீதிகளில் நடந்து, ஊடலைத் தீர்த்து வைக்கின்றார். இவ்வாறு சுந்தரர் கதை சுவை மிக்கது. இனியது.

இறுதியில் சுந்தரர், 'வெறுத்தேன் மனை வாழ்க்கை' எனும் போது, வெள்ளை யானையை அனுப்பிக் கயிலாயத்துக்கு அவரை அழைத்துக் கொள்கின்றார் இறைவன். சிவகணங்களுக்குத் தலைவனாக்குகின்றான். சிவகணங்கள், இறைவன் அடியார்கள், தோற்றத்திலும் இறைவனைப் போன்றவர்கள் என்று சிவதருமோத்திரச் செய்யுள் கூறும்.

சுந்தரரின் இயற்பெயரே நம்பிஆரூரர் என்பது புலனாகின்றது. நம்பி என்பது ஆண்மக்கட்குச் சிறப்புப் பெயர். மரபுப்



பெயரை, இயற்பெயருக்கு முன்னமைத்தல் இலக்கணத்திற்கு ஒத்தது. அவரது பெற்றோர் ஆரூர்ப் பெருமான் மீதுள்ள விருப்பத்தால் அவ்வாறமைத்தனர் போலும். சுந்தரர் என்ற பெயர், சுந்தரர் புராணத்தில் இல்லை. திருநாவுக்கரசு புராணத்துள் ‘அறந்தரும் நாவுக்கரசு ஆலால சுந்தரரும்’ என்றவிடத்து வந்துள்ளது.

இத்தகைய சுந்தரர் வாழ்க்கை வரலாறு, ஏதோ ஒரு சுவைமிக்க இனிய கதையாக நம்மைக் கவர்கின்றது. இத்தகைய கதை நிகழ்வுகள் காவியம் பாடவல்ல கருப் பொருள்கள் என்று சேக்கிழார் கண்டார்.

அது மட்டும் அன்று சுந்தரர் மிகப் பெரிய சைவத் தொண்டைத் திருவாரூரில் செய்தார். அதுதான் ‘திருத்தொண்டத் தொகை’ பாடியது.

> ''தேசமுய்யத் திருத்தொண்டத் தொகை
> முன்பளித்த திருவாளன்
>
> வாசமலர் மென்கழல் வணங்க வந்த
> பிறப்பை வணங்குவாம்''

என்பார் சேக்கிழார்.

திருவாரூரில் இறைவனே, தொண்டர்களைப் பாடுமின் என்று ஆரூரருக்கு அறிவித்தார்.

அவ்வாறே சுந்தரரும், இறைவன் அடி எடுத்துக் கொடுக்க, ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று ஆரம்பித்து, தமக்கு முன்னரும், தமது சமகாலத்திலும் வாழ்ந்த சிவனடியார்களைக் கூறி அவர்களுக்கு வணக்கம் செய்தார். பின்னர் நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி என அதை விரித்துரைத்தார்.

சேக்கிழார் பெருமான், இந்த அடியார்கள் பெருமையையும், அவர்தம் வரலாற்றையும் பாடுகின்றார். ''திருத்தொண்டர்மாக்கதை'' என்று அவரே குறிப்பிடுவார். அப்படி அடியார்களின் வரலாற்றை மட்டும் சொன்னால் அது ஒரு வரலாற்று நூலாகத்தான் இருக்கும். ஆகவே, பெருங்காப்பியமாக அது இருக்க வேண்டும். சைவக் காப்பியமாக இருக்க வேண்டும். சிவனடியார்களின் வரலாறும், தமிழ்நாட்டின் பண்பாடும், பழக்க வழக்கங்களும் அதில் இழையோட வேண்டும். அதற்குரிய கதை நாயகரின் கதையும் சுவை மிக்கதாக இருக்க வேண்டும், அதற்கு ஏற்றது சுந்தரர் சரிதம் தான்.

ஆகவே, அவரையே பாட்டுடைத் தலைவராக்கினார் எனலாம். அந்நூலின் முதலிலும் இடையிலும், இறுதியிலும், சுந்தரர் சரிதத்தை வகுத்தார். அக்காப்பியத்தில் சுந்தரர் வரலாறும், அறுபத்துமூவர் வரலாறுகளும், தொகையடியார் வரலாறும் அடங்கும் வண்ணம் அமைத்தார். சிவனடியார் தம் பெருமைகளை ஒருங்கு கூறித் தொகை பாடியதால், சுந்தரரையே தமக்கு முன்னவராக சேக்கிழார் ஏற்றுக் கொண்டார்.

இறைவன் என்பவன் எங்கோ இருப்பவன். மிகப் பெரியவன். நம்மால் எளிதில் அடைய முடியாதவன், நாம் பாவிகள் என்று கூறுவதற்கு மாறாக இறைவன் நம்முடைய தோழன், வாழ்க்கையில் நமக்கு வேண்டியவற்றைத் தருபவன் என்ற புது நெறி சுந்தரரால் சைவத்தில் தமிழகத்தில் கால்கொளப் பெற்றது. சக மார்க்கம் என்று வைதிகர்கள் அதைப் பெயரிட்டு அழைப்பர்.

ஆக, இந்த வகையில், சுந்தரர் வரலாறு, தமிழ்ச் சைவ உலகில் சிறப்புடையதாக திகழ்கின்றது எனலாம்.

## “ எண்ணச் சிதறல் ”

மதிப்பிற்குரிய திருக்கோயில் ஆசிரியர் அவர்களுக்கு

டிசம்பர் திங்களிதழில் முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி எழுதியுள்ள ஆவிக்கோர் பற்றுக் கொம்பு கட்டுரை மிக சிறப்பாக இருந்தது.

சங்கரபாண்டியன்
இராயப் பேட்டை

குருஸ்தலமான ஆலங்குடிக்கு பலமுறை சென்று வந்திருக்கும் நான் அந்த பிரசித்தி பெற்ற ஆலயத்துக்கு எதிரேயுள்ள கணபதியையும், குட்டுப் போட்டு, தோப்புக்கரணமிட்டு வணங்கி வருவதுண்டு. ஆனால் அந்த கலங்காமல் காத்த விநாயகரின் அருமை பெருமைகளை திருப்புகழ் மாமணி மு.அருணகிரி அவர்களது கட்டுரையைப் படித்ததும் நான் முழுமையாக அறிந்து கொள்ள முடிந்தது.

அதே போன்று நடுநாட்டுத் திருவரங்கமும், ஜம்புகேச்சுவரமும் (திருக்கோயில் உலா- 2) என்ற கட்டுரையும் அறிய ஆலயங்கள் பற்றிய தகவலைத் தாங்கி வந்திருந்தது.

இரா. வளையாபதி
தோட்டக்குறிச்சி.

# திருவிளையாடல் புராணம்
## வலை வீசின படலம்

இரா.அரங்கசாமி

ஒருநாள், திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள், அன்னை மீனாட்சியம்மையுடன் தனிமையில் அமர்ந்து மிக ரகசியமான வேதத்தின் உட்பொருளை அம்மையாருக்கு உபதேசித்து அருளினார். என்ன காரணத்தினாலோ, இறைவனின் உபதேசத்தை, மீனாட்சியம்மை ஒரு வித அச்சத்துடன் விருப்பமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார், அதை யூகித்து அறிந்த பெருமான், ''நம்மிடத்தே வேதப்பொருளை, விருப்பமின்றிக் கேட்டுக் கொண்டிருந்த நீ, உண்மையை மறைத்து நடித்த குற்றத்திற்காக, மீன் பிடித்து வாழும் பரதவர் குலத்து மகளாகப் பிறக்கக் கடவாயாக'' என்று சபித்து விட்டார்.

உடனே மீனாட்சியம்மையார், ''வள்ளலே! இது என்ன சோதனை? தங்களைப் பிரிந்து நான் எப்படி வாழ்வேன்''? என்று கேட்க ''கடற்கரைச் சோலையில் வாழும் பரதவ மன்னனின் மகளாகப் பிறந்து நீஅங்கு வளர்ந்து வரும் நாளில் நாம் அங்கு வந்து உன்னைத் திருமணம் செய்து கொள்வோம், கவலை கொள்ள வேண்டாம்! என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதையறிந்த விநாயகக்கடவுள், தந்தையாகிய இறைவனிடம் சென்று, அங்கிருந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் தமது துதிக்கையினால் சாய்த்துப் பரப்பி ''இந்நிகழ்ச்சியெல்லாம் இந்தச்சுவடி களாலல்லவா ஏற்பட்டது'' என்று கூறி அவற்றைத் தூக்கிக் கடலில் வீசி எறிந்தார். அது போலவே முருகக் கடவுளும் சிவஞானபோதம் என்ற நூலை எடுத்துக் கடலில் வீசியெறிந்தார்.

உடனே சிவபெருமான் வாயில் காப்போனாகிய நந்திதேவரை அழைத்து ''சமயம் அறியாமல் இவர்களை ஏன் உள்ளே அனுப்பினாய்? அதனால் தான் இந்தத் தீங்கு ஏற்பட்டது. இந்தத் தீங்கு நீங்க, இப்போதே நீஒரு சுறாமீன் வடிவம் கொண்டு கடலில் திரியக்கடவாய்!'' என்று கடிந்து கொண்டார். விநாயகரைச் சபித்தால், அது தன்னையே சாரும் என்பதால் அவருக்குச் சாபமிடாமல் முருகக் கடவுளை நோக்கி, ''நீ வணிகர் குலத்தில் ஓர் ஊமைப் பிள்ளையாகப் பிறக்கக் கடவாய்'' என்று பணித்தருளினார்.

பாண்டிய நாட்டின் கீழைக் கரைக் கடலின் ஓரம், பாக்கம் என்ற பெயரில் ஓர் ஊர் உண்டு. அங்கு, பரதவர்கள் அனைவருக்கும் அரசனாக ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு சிவபக்தன். அந்தப் பரதவ மன்னனுக்குப் பலகாலம் வரை மகப்பேறு ஏற்படவில்லை. ஒரு நாள் அவன் கடற்கரை ஓரமாக உள்ள ஒரு தோப்பின் வழியே சென்று கொண்டிருந்த போது, ஒரு புன்னைமர நிழலில் ஒரு பெண் குழந்தை அழுது கொண்டிருந்ததைக் கண்டான்.

அந்தக் குழந்தையைக் கண்டதும், பிறவிக் குருடனுக்குக் கண்பார்வை கிடைத்ததைப் போல் அவன் மகிழ்ந்தான். அந்தக் குழந்தையைச் சிவபெருமான் தனக்கு அளித்த வரமாகக் கருதினான். பரதவமன்னனும், அவன் மனைவியும் எல்லையில்லா மகிழ்ச்சியுடன் குழந்தையைத் தங்கள் மாளிகைக்கு எடுத்துச் சென்று அன்புடன் வளர்த்து வந்தனர். நாளடைவில் அந்தப் பெண் வளர்ந்து பருவ வயதை அடைந்தாள்.

இறைவன் பணித்தபடி, சுறாமீன் வடிவம் எடுத்தார் நந்தி தேவர். சுறாமீன்களிலேயே அது



மிகவும் வலிமையுடைய மீனாக வளர்ந்து, தோணிகளையும் படகுகளையும் தாக்கிக் கொண்டு, கடல் வழியே மரக்கலங்கள் போக முடியாத அளவுக்கு அட்டகாசம் செய்தும் வந்தது.

எப்படியாயினும் அந்தச் சுறாமீனைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மீன் பிடிக்கச் சென்ற அந்தப் பரதவ மன்னன் எவ்வளவோ முயன்றான், ஆனால் அந்த மீனைப் பிடிக்க முடியவில்லை. எனவே அவன் ''இந்த சுறாமீனை இங்கு வந்து பிடித்து எவன் அடக்குகிறானோ அவனுக்கே என் மகளை மணம் செய்து தருவேன்'' என்று உறுதி செய்து அந்த உறுதியை வெளிப்படையாகவும் அறிவித்தான்.

சிவபெருமான் அவன் முன்பு, பரதவேடத்தில் தோன்றினார். 'நீயார் சொல்' என்று பரதவர் தலைவன் கேட்டான். சோமசுந்தரக் கடவுள், ''நான் மதுரையில், வலைஞர்களுக்கெல்லாம் அரசனாக உள்ளவரின் மகன், பெரிய பெரிய மீன்களை வலை வீசிப் பிடிப்பதில் வல்லவன்'' என்று கூறினார். உடனே பரதவர் தலைவன், ''இந்த கடலில் மிகப் பெரிய சுறாமீன் ஒன்று சீற்றங்கொண்டு திரிகிறது. அதைப் பிடித்துக் கொடுத்தால் உனக்கு என் மகளையே திருமணம் செய்து கொடுக்கிறேன்'' என்றான்.

உடனே வலைஞனாக வந்த சோமசுந்தரக் கடவுள், தம் அருகில் இருந்த ஒருவனிடமிருந்து ஈயமணிகள் பொருந்திய வலையை வாங்கிக் கொண்டு, கடலைக் கிழித்துச் சென்று கொண்டிருந்த ஒரு படகில் ஏறிக் கொண்டார். அதிலிருந்தபடியே நன்கு குறிபார்த்து வலை வீசினார். அந்த வலை வீச்சிலேயே சுறாமீன் சிக்கிக் கொண்டது. தாம் வீசிய வலையில் சிக்கிய சுறாமீனை இழுத்துக் கரையில் போட்டார். உடனே வலைஞர்கள் அனைவரும் கூடி ஆரவாரித்துப் பாராட்டினர்.

பரதவர்களின் தலைவன் மனமகிழ்ந்து முன்னர் அறிவித்தபடி பறைகள் முழங்க, தன் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் குதித்துக் கூத்தாட, சுறாமீனை வென்ற வீரனாக வந்த பெருமானுக்குத் தன் அன்புத் திருமகளைத் திருமணம் செய்து கொடுத்தான்.

திருமணக்கோலம் கொண்ட வலைஞனாகிய சிவபெருமான், வலைஞர் மகளாகிய உமாதேவியாருடன் விண்ணில் எழுந்தருளினார். கடற்கரையில் கிடந்த சுறாமீனாகிய நந்தி தேவரும், விநாயகப் பெருமானும் முருகப் பெருமானும் கடலில் வீசிய சுவடிகளுடன், தமது பழைய வடிவத்தைப் பெற்று அங்கு தோன்றினர். பிறகு சிவபெருமான் உமாதேவியாருக்கும், அறுபதினாயிரம் சிவனடியார்களுக்கும், சிவயோகியருக்கும் வேதத்தின் உட்பொருளை உபதேசித்து எல்லோருடைய புற்றினையும் ஒழித்து வீடுபேற்றை அருளிப் பின் தமது தேவியாரோடு மதுரைப் பதியை வந்தடைந்து அருள்செய்தார்.

# இடர் களைவாய் இறைவா

**வி**னையின் பயனாய் ஆன்மாக்களுக்கு ஏற்படும் அல்லல்களை களைவது இறைவன் அருள். அவன் அருளின்றி இடர்கள் அகலா. அருள் கிட்டின் பகலவன் கண்டபனிபோல் விலகும் என்பது நிச்சயம்.

அடியார்களுக்கு ஏற்படும் இடர்களைக் களையும் இறைவனைப் போற்றித் துதிக்க திருமுறைகளில் மூவர் தேவாரங்களில் நான்கு இடர்களையும் பதிகங்கள் உள்ளன. அத்தகைய பதிகங்கள் திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்கு மங்கையர்க்கரசியின் வேண்டுதல்படி சைவம் தழைத்தோங்கவும், சமணம் விலகவும் புறப்பட்ட திருஞானசம்பந்தரின் பயணத்தின் முன்பு ''நாளும், கோளும்'' சரியில்லையென்று கூறிய அப்பர் பெருமானுக்கு பதிலுரையாக வெளியிட்ட பதிகம் சம்பந்தரின் ''கோளறு பதிகமாகும்''

திருநெடுங்களத்தில் அருளிய ''மறையுடையாய் தோலுடையாய்'' என்ற பதிகமும், ஆவடுதுறையில் அருளிய ''இடரினும் தளரினும்'' எனும் பதிகமும், வடதிருமுல்லைவாயிலில் சுந்தரரின் திருப்பாட்டாக வெளியிடப்பட்ட ''திருவும்'' என்ற பதிகமும் என்பர் சைவ நல்லுலகத்தினர். திருநெடுங்களத்தில் அருளிச் செய்த முதலாம் திருமுறையில் ''மறையுடையாய்'' எனத் தொடங்கும் பதிகத்தினைத் தொடர்ந்து

இவ்விதழில் ''பாங்கினல்லார்'' எனத் தொடங்கும் பதிகத்தினைக் காண்போம்.

***''பாங்கினல்லர் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்***<br>
***தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்***<br>
***தாங்கிநில்லா வன்பினோடுந் தலைவநின்றாள் நிழற்கீழ்***<br>
***நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.'' 5.***

திருநெடுங்களத்தை விரும்பிக் கோயில் கொண்டுள்ள பெருமானே ! யாவர்க்குந் தலைவனே ! அடிமைப்பண்பு மிக்கவர்களும் தெய்வவழிபாடு செய்பவர்களும், தவக்கோலங் கொண்டவர்களும் ஒன்றின மனதுடன் பாடலோடு உன்னுடைய திருவடியை வணங்கித் தாங்க முடியாமல் கரை கடந்து பெருகுகின்ற அன்புடன் உன்னுடைய திருவடி நீழலை நீங்காது உன்னை வழிபடுகின்ற பக்தர்களின் துன்பங்களை நீக்கி அருள்புரிவாயாக.

நம் இடர்கள் களைய ஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள முதலாம் திருமுறையில் வரும் இப்பாடலை இம்மாத பாராயணப் பகுதியாகக் கொண்டு பாராயணம் செய்து பலன்பெறுவோமாக.

**சிவ. அம்பலவாணன்**

# பதில்



**சோமசூத்ரப்பிரதக்ஷிணம் என்பது என்ன? எத்தனை பிரதட்சிணங்கள் செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? பிரதக்ஷிணத்தின் பயன் யாது?**

சிவன் கோயில்களில் பிரதோஷ தினத்தன்று பிரதோஷ பூஜை வேளையில் முதலில் நந்தியைத் தரிசனம் செய்து கொண்டு இடப்புறமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசனம் செய்ய வேண்டும்.

பின்பு சண்டேசர் தொடங்கி வலமாக வந்து, மீண்டும் நந்தியை வணங்கிப் பின் வலமாகவே சென்று சண்டேசர் சந்நிதி வரை செல்லாமல் அதற்கு முன் இறைவனின் அபிஷேக நீர் வெளிப்படுகின்ற கோமுகம் என்னும் பகுதிவரை சென்று அதைக் கடக்காமல் மீண்டும் இடப்புறமாகவே வந்து நந்தியை தரிசனம் செய்து கொண்டு தொடர்ந்து சண்டேஸ்வரர் வரை தரிசிக்க வேண்டும். இது வரை ஒரு பிரதக்ஷிணம் கணக்காகும்.

இவ்வாறு 12பிரதக்ஷிணங்கள்செய்வதுநல்லது.

| | |
|---|---|
| ஒரு பிரதிக்ஷிணம் | - பாவம் அகற்றும். |
| இரண்டு பிரதிக்ஷிணம் | - ஸ்வர்கலோக பதவியைத் தரும் |
| மூன்று பிரதிக்ஷிணம் | - இந்திரபோகம் தரும் |
| நான்கு பிரதிக்ஷிணம் | - பிரமலோக மடையலாம் |
| ஐந்துபிரதிக்ஷிணம் | - சகலலோகப் பிராப்தி தரும் |
| ஆறு பிரதிக்ஷிணம் | - அஷ்டஐஸ்வர்யம் தரும் |
| ஏழு பிரதிக்ஷிணம் | - சிவ கைங்கர்யப் பலனை அடையலாம் |
| எட்டு பிரதிக்ஷிணம் | - சிலலோகமடையலாம் *(சாலோகம்)* |
| ஒன்பது பிரதிக்ஷிணம் | - இறைவனின் சமீபம் *(சாமீப்யம்)* அடையலாம். |
| பத்து பிரதிக்ஷிணம் | - சிவஸ்ரூபம் பெறலாம் *(சாரூபம்)* |
| 11வது பிரதிக்ஷிணம் | - இறைவனிடம் சேர்க்கை ஏற்படும் *(சாயுஜ்யம்)* |
| 12 வது பிரதிக்ஷிணம் | - இறைவனுடன் இரண்டறக் கலக்கலாம் *(ஐக்யம்)* |

மேலும் காலை, பகல், மாலை நேரங்களில் விநாயகருக்கு ஒரு பிரதக்ஷிணமும், சூரிய பகவானுக்கு இரண்டு பிரதக்ஷிணங்களும் சிவபிரானுக்கு மூன்று பிரதக்ஷிணங்களும் அம்பாளுக்கு நான்கு பிரதக்ஷிணங்களும் செய்ய வேண்டும்.

**இளையாழ்வார் என்று யாருக்குப் பெயர்? அவருக்கு வேறு பெயர்கள் என்னென்ன?**

இராமானுஜருக்குப் பெயர் (1) அவர் திருவவதரித்த 12-ஆம் நாளில் அவருக்கு நாமகரணவிழா நிகழ்ந்தபொழுது, பெரிய திருமலை நம்பிகள் 'இளைய ஆழ்வார்' என்று பெயரிட்டு வழங்கினார். (2) காஞ்சியில் விளங்கும் வரதராஜர் ஆகிய தேவப் பெருமாள், இவர் துறவு நெறியை மேற்கொண்டபொழுது இராமானுஜர் என்ற பெயரை அளித்தார். (3) திருவரங்கம் சென்ற போது ஸ்ரீரங்கநாதர், இவரை உடையவர் எனக்கூறி வாழ்த்தியருளினார். (4) 'நான் ஒருவன் நரகம் சென்று நலிவுற்றாலும் குற்றமில்லை. ஏனைய மக்கள் எல்லோரும் அறிந்து உய்ந்து ஈடேறட்டும்' என்னும் உயரிய நோக்குடன், தாம் கேட்ட மறைநுண்பொருளைப் பிறரெல்லார்க்கும் அறைகூவி அறிவுறுத்தருளிய இவர்தம் இனிய பண்பு நலனை வியந்து 'எங்களுக்கெல்லாம் தலைவர்' என்னும் பொருளில், திருக்கோட்டியூர் நம்பிகள் இவரை எம்பெருமானார் எனப் பாராட்டிச் சிறப்பித்தார். (5) இவர் தம் பக்தி ஞான வைராக்கிய விசேடப் பண்பு நலன்களை யுவந்தும், ''நாறு நறும்பொழில்'' என்னும் பாசுரத்தில் திருமாலிருஞ் சோலை நம்பிக்குத் தான் சொல்லி வைத்த நேர்த்திக் கடனை நினைந்து நிறைவேற்றி உதவிய செயற்திறத்திற்கு மகிழ்ந்தும், கோயில் அண்ணன் என்று ஸ்ரீ ஆண்டாள் இவரைப் புகழ்ந்தார். (6) பிரமசூத்திரம் பகவத்கீதை முதலியவற்றிற்கு இவர் எழுதிய பாஷ்யங்களின் சிறப்பினை வியந்து, ஸ்ரீ சரசுவதியால் இவருக்குப் பாஷ்யகாரர் என்னும் பெயர் வழங்கப் பெற்றது. (7) இவருக்குச் சதாபிஷேகம் நிகழ்ந்த சமயத்தில், எதிராஜர் (துறவி வேந்தர்) என்னும் பெயர் உண்டாயிற்று.

# குரு பூஜை

திரு பெ.ராமநாதபிள்ளை, பி.ஏ.,பி.எட்.,
செயல் அலுவலர்

சிவபெருமானே முழு முதற்கடவுள் என்றும். வேதமும், சிவ ஆகமுமே சிவபெருமான் அருளிச் செய்த நூல்கள் என்றும், அவற்றுள் வேதம் பொதுநூல், ஆகமம் சிறப்பு நூல் என்றும், போற்றப்பட்டு வருகிறது.

விபூதி, ருத்ராட்சம், சிவ சின்னங்கள் என்றும், திரு ஐந்தெழுத்தே மூல மந்திரம் என்றும், சிவலிங்க வழிபாடே சிவபெருமானுக்கு செய்யப்படும் மிகப்பெரிய வழிபாடு என்றும், விபூதி, ருத்ராட்சம், ஐந்தெழுத்து சிவலிங்க வழிபாடு மற்றும் சிவ ஆகமத்தில் விதித்தபடி சிவ தீட்சைபெற்று வாழ்பவரே சிவனடியார்கள் ஆவார்கள்.

அறுபத்தி மூன்று நாயன்மார்கள், மாணிக்கவாசகர், சேக்கிழார், சந்தான குரவர்களான மெய்கண்டத்தேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் போன்ற பெருந்தகையோர்களால் தமிழ்நாடெங்கும் சைவம் தழைந்தோங்கியது.

எனவே, சைவ சமயத்தார்கள் அனைவரும் மேற்படி நாயன்மார்களுக்கு குரு பூஜை செய்யவேண்டியது மிக மிக அவசியமாகும்.

அவ்வாறே, அனைத்து நாயன்மார்களுக்கும், குரு பூஜை செய்ய இயலாதவர்கள் சமய குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் மற்றும் சந்தான குரவர்களான மெய்கண்டார். அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் மற்றும் பெரிய புராணம் செய்தருளிய சேக்கிழார் ஆகிய ஒன்பது நாயன்மார்களுக்காவது குருபூஜை கண்டிப்பாகச் செய்யவேண்டும்.

குருபூஜை தனியே செய்ய இயலாதவர்கள் குருபூஜை செய்யும் இடத்தில் குருபூஜைக்கு வேண்டிய பொருட்களை வழங்கலாம். அதையும் செய்ய இயலாதவர்கள் குருபூஜை செய்யும் இடத்திற்குச் சென்று குருபூஜையில் கலந்து கொள்ளலாம்.

குருபூஜை செய்யும் முறை

அந்தந்த நாயன்மார்களுக்கு அவரவர் முக்தி பெற்ற திரு நட்சத்திரங்களில் திருக்கோயிலில் சிறப்பு பூஜையும், வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், திருமேனி எழுந்தருளல் உற்சவம் ஆகியனச் செய்யவேண்டும். மடத்திலும், தங்கள் தங்கள் வீடுகளிலும், சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆச்சாரியார் என்ற நால்வகை மாகேசுரர்களையும், தூரத்தில் கண்டபொழுதே சிரத்தின் மீது அஞ்சலி செய்து, விரைந்து எதிர்கொண்டு, அழைத்து வந்து அவர்களுடைய திருவடிகளை தீர்த்தத்தினால் விளக்கி, அத்தீர்த்தத்தினை சிரசின் மேல் தெளித்து அவர்களை பந்தியாக இறுக்கச் செய்து ஓதுவார்கள், தேவாரம் ஓத, அன்னமும், கறியமுதும் படைத்து, அவ்வடியார்களை அந்த நட்சத்திரத்திலே முக்தி பெற்ற நாயன்மாராக பாவித்து மந்திர புஷ்பங்களால் அர்ச்சித்து, தூப தீபங்கள் கொடுத்து, கர்ப்பூர ஆரத்தி எடுத்து, மூன்று முறை அல்லது ஐந்து முறையாவது வணங்கி திருவமுது செய்வித்தல் வேண்டும் - குருபூஜை செய்பவர்களும், செய்விப்பவர்களும், குருபூஜையிலே அர்ச்சனை பெற்று அமுது செய்பவர்களும், மாகேஸ்வரர்களும், அத்தினத்தில் குருபூஜைக்கு முன் யாதொன்றும் உண்ணக்கூடாது. அவ்வாறு உண்ணவேண்டும் என்றால் பால், பழம் மட்டுமே உண்டு, சிவபெருமானையே நினைத்திருக்க வேண்டும்.

தீட்சைபெற்ற சிவனடியார் ஒருவர், சிவலிங்க வழிபாட்டினாலோ அல்லது குரு வழிபாட்டினாலோ, அடியவர் வழிபாட்டினாலோ முக்தியை அடையலாம்.

நாயன்மார்கள் அறுபத்தி மூவர்களும், குரு லிங்க சங்கம வழிபாட்டின் மூலமே முக்தி பெற்றவர்கள் ஆவார்கள்.

இறுதியாக இப்பூமியை தாளாகக் கொண்டு, மரங்களை எழுதுகோலாகக் கொண்டு, கடலினை மையாகக் கொண்டு எழுதினாலும், சிவனடியார்களின் பெருமைகளையும், புகழையும் எழுதி முடிக்க முடியாது என்பதே முக்கால உண்மையாகும்.

**இறைவன் இருக்குமிடம்**

எல்லா உயிர்களையும் தம்முயிரே போல் போற்றி, யார் உவப்புடன் அவ்வுயிர்களின் மேன்மைக்காக உழைக்கிறார்களோ அவர்களின் திருவுளத்தில் இறைவன் கோயில் கொண்டு விளங்குகிறான்.

- இராமலிங்க சுவாமிகள்

# துன்பம் போக்கும் திருநெடுங்களம் திருக்கோயில்

வழிபாட்டுச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் உடைய பல திருக்கோயில்கள் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருநெடுங்களம் திருக்கோயில்மக்களின் துன்பங்களைப் போக்கும் சிறப்பான தலமாக விளங்குகிறது. திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் சாலையில் துவாக்குடியிலிருந்து வடக்கில் சுமார் 3கி.மீ தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி நகரத்திலிருந்து நகர பேருந்துகள் இவ்வூருக்கு செல்கின்றன. தமிழ்நாட்டில் தேவாரப் பாடல் பெற்று விளங்கும் தலங்களில் காவிரி ஆற்றில் தென்கரைத் தலங்களில் 8வது திருத்தலமாக திருநெடுங்களம் விளங்குகிறது. இத்தலத்து இறைவன் திருநெடுங்களநாதர், நித்திய சுந்தரேசுவரர் எனவும் அழைக்கப்படுகிறார். இங்கு கோயில் கொண்டு விளங்கும் அம்பாள் ஒப்பிலாநாயகி எனவும் மங்களாம்பிகை எனவும் அழைத்து போற்றுகின்றனர்.

**புராண வரலாறு :** அன்னை பார்வதி தேவி இங்கே தவமிருந்து இறைவனின் கைத்தலம் பற்றியதாக புராண வரலாறு கூறுகிறது. அகத்தியர் இத்தலத்தில் தவமிருந்து இறைவன் அருள் பெற்றதாகவும், வங்கியசோழன் என்ற மன்னனுக்கு இறைவன் அருள் வழங்கியதாகவும் புராண வரலாறுகள் கூறுகின்றன.

**தலப்பதிகம் :** திருஞான சம்பந்தர் பெருமான் இத்தலத்தை வணங்கி இடர்களையும் திருப்பதிகம் அருளப் பெற்ற சிறப்புடையது. ஒவ்வொரு பாடலின் இறுதியில் 'இடர்களையாய் நெடுங்களம் மேயவனே' என்று உளம் உருக வேண்டுகிறார். திருஞானசம்பந்தர் பெருமான் இத்தலத்திற்கு வந்து வழிபட்டதை 'நெடுங்களத்து ஆதியை அன்பால் நின்பால் நெஞ்சம் செலாவகை நேர் விலக்கும், இடும்பைகள் தீர்த்து அருள் செய்வாய்' என்னும் இன்னிசை மாலை கொண்டேத்தி ஏகி என்று பெரிய புராணம் கூறுகிறது. மேலும் திருபுள்ளிருக்கு வேளூர்த் திருத்தாண்டகப் பதிகத்திலும், பாபநாச திருப்பதிகத்திலும் அப்பர் பெருமான் இத்தலத்தைப் போற்றி பாடியுள்ளார். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய சேத்திரத் திருவெண்பா பாடலில் திருநெடுங்களத்து இறைவன் திருவடிகளை எப்பொழுதும் நினைக்க வேண்டும் என



வேண்டுகின்றார்.

**தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது**

**பெட்டப்பணமென்று பேர்ட்டுக் - கட்டி**

**எடுங்களத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே**

**நெடுங்களத்தான் பாதம் நினை**

**என்பது அப்பாடல்.**

இத்தலத்தில் எழுந்தருளிய முருகப் பெருமானைக் கண்டு வழிபட்டு தனது திருப்புகழில் **''அன்பர் குலவுத் திருநெடுங்கள வளம் பதியில் அண்டரயனும் பரவும் தம்பிரானே''** என்று அருணகிரிநாதர் போற்றி மகிழ்கின்றார். அருட்பிரகாச வள்ளலார் பெருமானும் இத்தலத்தைப் போற்றியுள்ளார். **''தன்னார் நெடுங்கள மெய்த் தாரகமே''** என்று துதிக்கின்றார். இக்கோயிலின் அம்பாள் ஒப்பிலா நாயகியைப் போற்றி ஒரு தனிப்பாடல் உள்ளது.

**திருக்கோயிலின் அமைப்பு :** கோயிலுக்கு முன் சுந்தரதீர்த்தம் என அழைக்கப்படும் குளம் உள்ளது. கோயிலுக்கு நுழைவு வாயிலின் இடப்புறம் விநாயகரும், வலப்புறம் கருப்பண்ணசாமியும் கோயில் கொண்டுள்ளார். உடல் நலம் குன்றியவர்கள் இவருக்கு வழிபாடு செய்து பானம் நைவேத்தியம் செய்தால் உடல் நலமடைகிறார்கள். மிகவும் சக்தி வாய்ந்த கருப்பண்ணசாமி. அடுத்து ஐந்து நிலை கோபுரம் புதிதாக கட்டப் பட்டுள்ளது. கோபுரத்தின் கல்கார பகுதி

மட்டுமே இருந்தது. இதனை திருப்பணி செய்து திருநெடுங்களநாதர் உழவாரப் பணிக்குழு முயற்சி செய்து ஐந்து நிலை கோபுரமாக கட்டியுள்ளனர். கோபுரத்தில் சுதை உருவங்களாக இத்தலத்தில் ஞான சம்பந்தர் வந்து வழிபட்ட வரலாறு. திருப்பதிகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள், இத்தல புராண செய்திகள், பிரதோஷ கால பூஜைகள் சிறப்பு, இத்தலத்தை வழிபட்டு பேறு பெற்றவர்கள். சிதம்பரம் ஆடவல்லான், திருவாரூர் தியாகராஜர், இராஜராஜேஸ்வரி ஆகியவை கதை வடிவங்களாக அமைக்கப்பட்டுள்ளது. கோயில் வரலாறு முழுவதும் சுதை உருவங்களாக அமைக்கப்பட்டிருப்பது புதிய முயற்சி, உழவாரப் பணிக்குழுவினர் போற்றப்பட வேண்டியவர்கள். கோபுரத்தை அடுத்து கொடிக்கம்பம், மலர்ந்த தாமரை போன்ற பலிபீடம், அடுத்து நந்தி மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன.

**அம்பாள் சன்னதி :** நந்தி மண்டபத்திற்கு வலப்பக்கத்தில் தெற்கு நோக்கி அம்பாள் சன்னதி உள்ளது. அம்பாள் தனது மேலிரு கரங்களில் தாமரை மலர்களைத் தாங்கியும், கீழிரு கரங்களில் அபய, வரத முத்திரை தாங்கியும் ஒப்பிலாநாயகி என்ற பெயருடன் அன்பர்களுக்கு அருள் வழங்குகிறாள்.



அன்னையை வழிபட்டு உள்ளே செல்வோம். இரண்டாம் திருச்சுற்றிலிருந்து முதல் திருச்சுற்றுக்கு செல்லும் முன் இரு நிலையுடன் கூடிய அழகிய கோபுரம் உள்ளது. நுழைவு வாயிலின் இருபுறமும் தேவகோட்டத்தில் துவாரபாலகர்களின் அழகிய வடிவங்களைக் காணலாம். சோழர் கால அரிய கலை படைப்புகளாக இவை விளங்குகின்றன. கோபுரம் வழியாக நுழைந்தவுடன் மகாமண்டபத்தில் விநாயகர். முருகப் பெருமான் ஆகியோரை வழிபடுகிறோம். முதல் திருச்சுற்றின் துவக்கத்தில் தெற்குப் பகுதியில் சமயக்குரவர் நால்வர் திருமேனியும் வழிபடப் பெறுகிறது. சேக்கிழார் திருமேனியையும் அண்மையில் நிறுவியுள்ளனர். இம்மண்டபத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த 'கல் உரல்' ஒன்று வைக்கப்பட்டுள்ளது. உரலின் வெளிப்பகுதி அழகிய வேலைப்பாடுடன் காட்சி தருகிறது.

**முதற்திருச்சுற்று:** திருச்சுற்று மாளிகையுடன் காட்சி தருகிறது. இதில் அப்புலிங்கம், வாயுலிங்கம், கோப்புலிங்கம், சப்த கன்னியர்கள், சேட்டை ஆகிய வடிவங்களை வழிபடுகின்றனர். சப்த கன்னியர்களின் சிற்ப நடுநாயகமாக உள்ள வராகிக்கு மஞ்சள் கரைத்த நீரால் அபிஷேகம் செய்து, அத்தீர்த்தத்தை கன்னிப் பெண்கள் தலையில் தெளித்துக் கொண்டால் விரைவில் திருமணம் ஆகும் எனக் கூறப்படுகிறது. மேற்கு பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் அருணகிரிநாதர் போற்றிய முருகன் சன்னிதி உள்ளது. வள்ளி-தெய்வானையுடன் அழகிய முகப்பொலிவுடன் காட்சி தரும் முருகனின் அழகே தனிதான். அடுத்து வடமேற்கு மூலையில் வரதராஜப் பெருமாள் தன் இரு தேவியார்களுடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகின்றனர். வடக்கு பிரகாரத்தில் அகத்தீசுவரர் சன்னதி, அகத்தியர் தீர்த்தம் தல விருட்சமாக கஸ்தூரி அரளி, வில்வ மரம் ஆகியவை உள்ளன. அருகில் சண்டேசுவரர் சன்னிதி உள்ளது. இதனை அடுத்து நடராசர் சபையும், அதன் எதிரே நவக்கிரக சன்னிதியும் உள்ளது. சூரியன் தன் இரு தேவியார்களுடன் மேற்கு திசை நோக்க, மற்ற அனைத்து கிரகங்களும் சூரியனைப் பார்த்து அமைக்கப்பட்டுள்ள அமைப்பு சிறப்பானதாக விளங்குகிறது. வடகிழக்கு மூலையில் கால பைரவர், அடுத்து சூரியனும் வழிபடப் பெறுகின்றனர்.

**கருவறை :** திருச்சுற்றில் வலம் வந்து பின்னர் இறைவனை வழிபடச் செல்கிறோம். சுவாமி சன்னதி கருவறை. அர்த்தமண்டபம்



ஆகிய அமைப்புகளுடன் விளங்குகிறது. முன் மண்டபத்தில் வாயிலின் இருபுறமும் துவார பாலகர்கள் காட்சி தருகின்றனர். கருவறையில் இறைவன் சுயம்பு வடிவாக காட்சி தருகின்றார். சிறிய லிங்க வடிவம், கருவறையில் உட்புற அமைப்பு புதுமையாக அறுகோண அமைப்பில் அமைந்துள்ளது. கருவறையின் மீது விமானமும், அர்த்த மண்டபத்திற்கு மேல் ஒரு விமானமும் ஆக இரு விமானத்துடன் காசியில் உள்ளது போல காட்சி தருவதால் இக்கோயிலை தட்சிணகைலாசம் என அழைக்கின்றனர்.

**அற்புத தட்சிணாமூர்த்தி :** கருவறையை சுற்றி சுற்று மண்டபம் உள்ளது. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட இக்கோயில், பிற்காலத்தில் பல மாற்றங்கள் அடைந்து உள்ளன. கருவறையில் வெளிப்புறத்தில் தெற்கு பக்கத்தில் மட்டும் தேவகோட்டம் உள்ளது. இதில் அற்புத யோக தட்சிணாமூர்த்தி வடிவத்தைக் கண்டு வழிபடலாம். மேலிரு கரங்களில் மழு, மான் ஏந்தியும், கீழிரு கரங்களில் வலது கை சின் முத்திரையுடனும் இடது கரத்தில் தீச்சுடரை தாங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இடது காலை மடக்கிய நிலையிலும், அதன்மேல் வலக்காலை மடக்கி அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். யோக பட்டம் இடக்காலினை சுற்றி வருவது போல காட்டப்பட்டுள்ளது. ஞானம் போதிக்கும் இறைவன் முன்பு இரு முனிவர்கள் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகின்றனர். கருவறையின் மேற்கு பக்கத்தில் அர்த்தநாரீசுவரர் வடிவம் தனியே வைக்கப்பட்டுள்ளது. வடக்குபுறம் தேவ கோட்டம் இல்லை. ஆடி மாதத்தில் நாள்தோறும் சூரிய ஒளி இறைவன் மீது படும் அற்புதக்காட்சியைக் கண்டு வழிபடலாம்.

**வரலாற்றுச் சிறப்பு :** இத்திருக்கோயிலுக்கு பலர் திருத்தொண்டு செய்துள்ளனர் என்பதை இக்கோயிலில் காணப்படும் முப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் அளிக்கும் செய்தியினால் அறிகிறோம். ஆதித்தசோழன், உத்தமசோழன், முதலாம் இராசராசசோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராசராசன், சுந்தரபாண்டியன், போசன மன்னன் வீரரானாதன், விஜய நகர மன்னர்கள் விருப்பண்ண உடையார், வீர நாராயண உடையார், வீர பிரதாப புஜபவராயர், தேவராயர், கம்பரசதேவ மகாராயர் போன்றோர் இக்கோயிலுக்கு பெருந்தொண்டு செய்துள்ளனர். இக்கோயிலின் இறைவன் திருநெடுங்களத்து மகாதேவர், நெடுங்களத்து ஆழ்வார், திருநெடுங்களமுடைய தம்பிரான் என்று விஜயநகர மன்னர் கால கல்வெட்டுகளில் இறைவன் அழைக்கப்படுகிறார். இக்கோயில் தட்சிண கைலாசம் எனவும், நிழலார் சோலைவனம் உடையார் எனவும் அழைக்கப்படுகிறது. இக்கோயில் இருக்கும் பகுதி சோழர் காலக் கல்வெட்டுகளில் பாண்டிய குலாசன் வளநாட்டு வடகவிநாட்டு தேவதானம் திருநெடுங்களம் கதவிரநாடு எனக் குறிக்கப் படுகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் பாண்டிய குலபதி வளநாடு என்று வளநாடு பெயர் மாற்றம் அடைகிறது. சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றில் ஐயசிங்க குலகால வளநாட்டு மீசங்களிநாட்டு வடகவி நாட்டு உடையார் திருநெடுங்களமுடையார் எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. கோயில் வழிபாட்டிற்கும் பூசைக்கும் திருப்பணிக்கும் தானமான நிலங்கள் அளிக்கப் பெற்ற செய்தி பெரும்பான்மையாக கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. திருவானைக்காவலைச் சேர்ந்த மோசி ஒற்றலுரன் கூத்தபிரான் என்பவன் இக்கோயிலில் ''லோகசுந்தரர்'' என்ற

திருமேனியை செய்து அமைத்து அதற்கு அமுது படைப்பதற்காக நில தானம் அளித்த செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. கோயிலுக்கு நெல் அளக்க கோது குலவன் என்ற மரக்கால் பயன்படுத்தப்பட்ட செய்தியையும் நாம் அறிகிறோம். இக்கோயிலின் வழிபாட்டிற்காக வேறு பல ஊர்களிலிருந்தும் நிலங்கள் தானமாக திருநாமத்துக்காணியாக அளிக்கப்பட்டது. இம்முறையை பிரதிதான பரிவர்த்தனை என கல்வெட்டு குறிக்கிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வளம்பக்குடி வனப்பக்குடையான் தில்லை நட்டப்பெருமாளான விசையாலய முத்தரையன் என்பவன் இக்கோயிலுக்கு பெருந்தொண்டு செய்ததில் குறிப்பிடத் தக்கதாக விளங்குகிறது. இவனுடைய மகன் ஆளுடைய பிள்ளையார் அடியான், இடர்களைவான் கிடைத்த நெல்லை அளக்க பயன்பட்ட மரக்கால் நித்த மணவாளன் மரக்கால் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்ட செய்தியையும் அறிகிறோம். ஞானசம்பந்தர் அருளிய இடர்களையும் பதிகம் அருளப்பெற்ற இத்தலத்தில் தானம் அளித்தவர்களின் பெயரும் இடர்களைவான் என்ற பெயரிட்டு அழைக்கப்பட்டது. திருப்பதிகத்தின் மீது இருந்த ஈடுபாட்டினை நம்மால் உணர முடிகிறது. வீரராயண உடையார் கல்வெட்டில் கோயில் தச்சன் (சிற்பி) தம்பிக்கு நல்லான் இக்கோயிலுக்கு வேண்டும். திருப்பணி செய்ய காணியாட்சியாக நிலம் தந்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருநெடுங்களம் திருக்கோயிலுக்கு சென்று வழிபட்டு நலமடைவோம்!

**சிறப்புகள்:** சிற்பக்கலை உடைய கல் உரல் இன்றும் உள்ளது. திருதென்முகப் பெருமான் (தட்சிணாமூர்த்தி) சித்தாசனத்தில் உள்ளார். அம்பிகை இப்பெருமானை வேண்டி தவமிருந்து திருக்கைலாயம் சென்றார். அகஸ்தியரும், வங்கிய சோழனும் இப்பெருமானை வேண்டி முக்தி பெற்றனர். ஆடி மாதத்தில் உதய காலத்தில் சூரியன், தனது ஒளியினால் பெருமானைத் தீண்டி வழிபடுகிறார். பெருமானின் கருவறைக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இரண்டு விமானகலசங்கள் உண்டு. (காசியில் உள்ளது போல்)

**வேண்டுவோர் வேண்டுவது ஈதல் :** சப்த கன்னிகையில் வராகிக்கு மஞ்சள் நீர் அபிஷேகித்து அத்தீர்த்தத்தைக் கன்னிப் பெண்கள் தலையில் தெளித்துக் கொண்டால் விரைவில் திருமணம் நடைபெறும். சிற்ப உரலில் விரலி மஞ்சள் இடித்து (வெள்ளி மற்றும் ஞாயிற்றுகிழமை ராகு காலத்தில்) வராகி அம்மனுக்கு அபிஷேகம் செய்தால் விரைவில் திருமணம் நடக்கும் (ஆண், பெண் இருபாலருக்கும்)

திருநெடுங்களநாதருக்கு மாதுளம் பழ முத்து உச்சி காலத்தில் அபிஷேகம் செய்தால்நினைத்த காரியம் கைகூடும். கால பைரவர் இங்கு வேறு எங்கும் இல்லாதவண்ணம் சர்பத்தோடு எழுந்தருளியுள்ளார். நாகதோஷம் உள்ளவர்கள் இப்பைரவருக்கு அபிஷேகம் செய்தால் நாகதோஷம் நீங்கி எல்லா நலங்களும் பெறுவார்கள்.

**மறையுடையாய் தோலுடையாய்**
**வார்சடைமேல் வளரும்**
**பிறையுடையாய் பிஞ்ஞகனே**
**என்றுனைப் பேசினல்லால்**
**குறையுடையார் குற்றம் ஓராய்**
**கொள்கையினால் உயர்ந்த**
**நிறையுடையார் இடர் களையாய்**
**நெடுங்களமேயவனே.**


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**


**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)



*''மலங்களைந்தா மென மாற்றி*
*தலங்களைந்தானற் சதாசிவமான*
*புலங்களைந்தானாய் பொதுவினில் நந்தி*
*நலங்களைந்தானுள் நயந்தாள் அறிந்தே''*
*(திருமந்திரம் 118)*

தலங்கள் ஐந்தான நற்சதாசிவமான என்றார் திருமூலர். நலம்தருபேதங்கள் என்று சைவ சாத்திரங்கள் பேசும் ஒன்பது வகையான நிலைகளில் பரசிவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அவை முறையே, சிவம், சத்தி, நாதம், விந்து. சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், மால், அயன் என்பனவாகும். அவற்றில் சதாசிவம் ஐந்தாவது நிலையில் உள்ளது என்பது ஒரு உண்மை.

சிவம் ஞானமேயாய் உள்ளது. செயல் வடிவாய் அது தோன்றும்போது, தனது சத்தியை வெளிப்படுத்துகிறது. அந்த சத்தியின் ஒரு கூறாக ஐந்து கலைகள் தோன்றுகின்றன. அவையும் ஆதார சத்திகளே. அவைமுறையே, சாந்தியதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி எனப்படும். இந்த சத்திகளெல்லாம் இறைவனின், இலயம், போகம், அதிகாரம் என்கிற நிலைகளில் அடங்கும். சதாசிவமே உலகத்திற்கு முதல் ஆவது ஆகமங்களில் கூறப்படுகிறது.

சதாசிவமே பிரபஞ்சமாகும் என்பார் திருமூலர். சதாசிவலிங்கத்துள் பூமியும், வானமும் அடங்கியுள்ளன என்கிறார். தாபரம், சங்கமம் என்று இருவகைப் பகுதிகளை பிரபஞ்சத்தில் காண்கிறோம். அவையெல்லாம் சிவ, சத்திகளின் கூறுகளே என்கிறார். உருவத் திருமேனியாகக் காணப்படுவது சத்தியின் அம்சம். அருவத்திருமேனி சதாசிவத்தின் அம்சம் என்கிறார்.

**சத்தி தராதலம் அண்டம் சதாசிவம்**
**சத்தி சிவம் மிக்க தாபர சங்கமம்**
**சத்தி உருவம் அருவம் சதாசிவம்**
**சத்தி சிவம் தத்துவம் முப்பத்தாறே**
*(திருமந்திரம் 1737)*

சிவனது சத்தி ஒன்றே, சதாசிவமாகி, சதாசிவத்தின் ஐம்முகங்களாகியும் நிற்கும் என்கிறார் திருமூலர். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம் என்பன மற்ற முகங்கள். அவைமுறையே நடுவு (மேல்) கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்கிற திசைநோக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன், உயிர்களுக்கு கருணை காட்டும் அதோ முகம் கீழ்நோக்கி உள்ளது என்று திருமந்திரம் தெரிவிக்கின்றது. ஐம்முகங்கள் வழியே, சத்தியம் ஐந்தாகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கிற ஐம்பணிகளும், ஐம்முகங்கள் வழியே நடைபெறுகின்றன.

படைத்தல் ஒரு காரிய காரண இயக்கம். இது உலகம், உடல், கருவிகள், அனுபவம் போன்றவை மூலமாக நடைபெறுகிறது. அவற்றின் பல்வேறு கூறுகளை தத்துவங்கள் என்று சாத்திரங்கள் பேசும். தத்துவங்கள் காரியப் பொருள் அனைத்திற்கும் மூலங்கள். இந்தக் காவியப் பொருள்களே சரம், அசரம் என்று நிற்கும். பொருட்கள் இன்பத்தைக் கொடுத்து, துன்பத்தில் ஆழ்த்துவது போன்ற அனுபவத்தைத் தரும். உண்மையில் உயிரானது பொருள்கள் வழி, தங்கள் வினைப்பயனை நுகர்ந்து அதிலிருந்து விடுபடுவதே.

திருவருளின் நோக்கமாகும். சதாசிவமே, அனைத்துப் பொருள்களையும் தத்துவங்களாகவும் நிற்கும் என்கிறார் திருமூலர்.

**தத்துவமாவது அருவம் சராசரம்**

**தத்துவமாவது உருவம் சுகோதயம்**

**தத்துவமெல்லாம் சகலுமாய் நிற்கும்**

**தத்துவமாகும் சதாசிவந்தானே**

*(திருமந்திரம்)*

சிவபெருமான் சதாசிவத்திருமேனியாக நிற்பது, உயிர்களின் உய்திக்காகவே என்று உணர வேண்டும். உயிர்களின் மலங்கள் அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்ற மூன்று ஒளி நிலைகள் உள்ளன. சாதகன் இவற்றையெல்லாம், தன் தியானத்தில் வைத்து. வழிபட்டு, தலைக்கு உச்சியில் உள்ள பரவெளியில் பரையோடு கூடிய சிவபெருமானின் தரிசனத்தைப் பெற விரும்புகின்றான். அவன் தனது உடம்பே சதாசிவ மூர்த்தி என்று உணர வேண்டும். உலகத்தோற்றம் ஒடுக்கம், சதாசிவத்தின் கீழ் நடைபெறுகிறது என்றும் உணர வேண்டும். அவ்வாறு, சாதகன் உணர்ந்து நின்றால், சத்தியையும், சதாசிவத்தையும், உடம்பிலேயே ஒளி விட்டுப் பிரகாசிப்பதைக் காணலாம் என்கிறார் திருமூலர்.

**ஆங்கவை மூன்றினும் ஆரழல் வீசிடத்**

**தாங்கிடும் ஈரேழுள் தான் நடுவானதில்**

**ஓங்கிய ஆதியும், அந்தம் ஆம் என**

**ஈங்கிலை தம்முடல் இந்துவும் ஆமே**

*(திருமந்திரம் 1749)*

மலங்கள் மூன்று என்பது சாத்திரம். அவை ஆணவம், கன்மம், மாயை. அவற்றுடன் மாயேயம், திரோதனம் என்பவற்றையும் சேர்ப்பதுண்டு.

ஆன்மா அறிவுடையது. ஆன்ம அறிவை மறைக்கும் பொருளாய் நிற்பது ஆணவம். ஆன்ம அறிவை மறைத்தல் ஆணவத்தின் இயல்பு. ஆயினும் இது ஒரு சடப்பொருள். செம்பிற்கு களிம்பு போல ஆன்மாவிற்கு இயற்கைக் குற்றமாய், அதனை, அநாதியே கட்டுப்படுத்தி நிற்கும். அறியாமையையே தன்னுடைய குணமாகக் கொண்டது. உயிர்கள் பலவாக இருந்தாலும், ஆணவமலம் என்பது ஒன்றே. ஆனால் எண்ணற்ற உயிர்களை பல்வேறு நிலைகளில் மறைத்து நிற்பதால் அதற்கு மறைக்கின்ற பல சக்திகள் உண்டு. நித்தமாய், வியாபகமாய் உள்ள ஆன்மாக்களை அணுத்தன்மை அடையச் செய்வதால் ஆணவம் என்ற பெயர் பெற்றது.

உயிர்கள் ஆணவத்தோடு மட்டும் உள்ள நிலையில் ஆணவம் அவற்றின் அறிவை முற்றிலும் மறைத்து விடுகிறது. தனக்கென்று அறிவு உண்டு என்பதை உயிர் முழுமையாகத் தெரிந்து கொள்ளாது. உயிர் அறியாமை இருளில் மூழ்கிக்கிடக்கும்.

பிறகு, திருவருளால் உயிர், உடம்பையும் கருவிகளையும் பெறுகிறது. உலகத்தில் பிறந்து சிறிது வெளிச்சம் பெருகிறது. உடலும், கருவிகளும் உலகம், போகம், மாயையால் ஆகிய கருவிகள். மாயா தனு விளக்கு என்கிறது சிவஞானபோதம். இந்த கருவிகள் அறிவை விளக்க வந்தவை. அறிவை மறைக்க வந்தவை அல்ல. ஆணவத்தின் காரணமாகவே உயிரானது தனது சுய அறிவாற்றலை மறந்து உடலோடு சார்ந்து தன்னை உடலாகவே கருதிக்கொள்கிறது. இருந்தாலும், மாயா காரியங்களின் வழியாகவே, உயிர் உலகம் மற்ற உயிர்கள் இவற்றுடன் தொடர்புகொண்டு சற்று விளக்கம் பெறுகிறது. உலக அறிவினைப் பெறுகிறது. கலை, வித்தை போன்ற ஆற்றல்கள் தூண்டப்படுகின்றன. முற்றிலும் ஆணவமலத்தால் மூடப்பட்ட நிலை கேவல நிலை எனப்படும். உயிர் உடலுடனும். கருவிகளுடனும் சேர்ந்து அறிவு விளக்கம் சிறிது சிறிதாகப் பெறும் நிலை சகல நிலை எனப்படும்.


ஒரு இருண்ட அறையில் ஒருவன் ஒன்றும் அறிய இயலாமல் இருளில் மூழ்கி இருப்பது போலாகும் ஆணவம். அந்த இருட்டு அறையில் கைவிளக்கு ஒன்றை வைத்து. பொருள்களை சற்று தெரிந்து கொள்வது சகல நிலையாகும்.

ஆகவே ஆணவம் இருள்போன்றது. மாயை விளக்கொளி போன்றது. ஆணவம் உயிருடன் இயற்கையில் உள்ளது. மாயை உயிருடன் பின்பு சேர்ந்தது. ஆணவம் உயிருடன் கலந்து நிற்கும். மாயை உயிருக்கு வேறாக இருக்கும் ஆணவம் உயிருடன் அனாதியே கலந்து நிற்பது. திருவருளால் மாயா கருவிகள். உயிர்கள் உய்திபெற, உயிருக்குக் கொடுக்கப்பட்டவை. உண்மையில் மயக்கத்தைத் தருவது. ஆணவம் மாயா காரியப் பொருள்கள். மயக்கம் தருவது போன்ற உணர்ச்சி ஏற்படுவதற்குக் காரணம் அறியாமையே. இது மூல மலமான ஆணவத்தின் வெளிப்பாடே.

மற்ற மலங்களைப் பற்றி மேலும் சிந்திப்போம்.

# சுயநலம் அமைதியைப் பெறுவதில்லை

- சுவாமி சிவானந்தா



நீங்கள் முழுக்கவும் சுயநலவாதியா அல்லது சில சமயங்களிலாவது நீங்கள் பிறரைப் பற்றி நினைக்கிறீர்களா? சுயநலவாதிக்கு அமைதியே கிட்டாது. மாறாக, நீங்கள் சுயநலமற்று இருந்தால் எந்த விதப் பிரதிபலனும் எதிர்நோக்காமல் செயல்பட்டால் உடனேயே நீங்கள் பேரமைதியை அனுபவிப்பீர்கள். பிரதிபலன் எதிர்பார்க்காத தொண்டு தூய மகிழ்ச்சியை அளிக்கிறது. பிறரை சந்தோஷப் படுத்துங்கள். அவர்களது மகிழ்ச்சியில் நீங்கள் ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள். இது அனைவராலும் அனுபவிக்கக் கூடிய தொன்றாகும். சிறியதோ பெரியதோ உங்களால் முடிந்த மட்டும் பிறருக்கு தொண்டு புரியுங்கள். ஆனால் பிரதி பலனையோ, நன்றியையோ எதிர்பார்க்கக்கூடாது.

தொண்டிற்காகவே தொண்டு செய்யப்பட வேண்டும்.

எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிட்டு கிறதோ அப்பொழுதெல்லாம் தொண்டு செய்யப்பட வேண்டும்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது.

ஒரு பெரிய நகரம். மாலை வேளை. இருள் சூழும் நேரம். நான் மாலை உலாவலுக்குச் சென்றிருந்தேன்.

அமைதியான தனி இடத்தில் ஒரு பெண் என்னிடம் வந்து, பாயி ஸாஹேப், டர் லக்தா ஹை (சகோதரா, எனக்குப் பயமாயிருக்கிறது) என்றாள். வினாடிப் பொழுதில் நான் அவள் நிலைமையை புரிந்து கொண்டேன். அந்தத் தனி இடத்தில் ஒரு ரிக்ஷாக்காரன் அவளைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறான். பயந்து போன அந்தப் பெண் எங்கு போவது என்பது தெரியாமல் தன் வீட்டுக்குப் போகும் வழியை தவற விட்டு விட்டாள். நான் அவளுக்குத் தைரியமூட்டினேன். சிறிது நேரத்தில் அவளது வீட்டை இருவருமாகச் சேர்ந்து தேடினோம். நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அவளது வீடு ஒரு ஃபர்லாங் தூரத்தில் தான் இருந்தது என்பதையும் கண்டுபிடித்தோம்.

நான் அவளுக்குத் துணையாகச் சென்று அவளை அவளது வீட்டில் சேர்த்துவிட்டு என் வழியே நான் போனேன். ஒரு சிறிய உதவிதான். அதனால் எனக்குப் பெரிய நஷ்டமொன்று மில்லை. ஆனால் அதனால் நான் பெற்ற மகிழ்ச்சியும் மனநிறைவும் எவ்வளவு! இப்பொழுது அதைப்பற்றி நினைத்தாலும் மனதில் அது அமைதியை அளிக்கிறது. எந்தவிதச் செலவு இல்லாமலோ அல்லது மிகக் குறைந்த செலவிலோ ஒருவர் பிறருக்குப் பல விதங்களிலும் உதவ முடியும். தேவை: ஒரு தூய்மையான இதயம் தான்.

### பெருமை எதற்கு

மக்களில் ஒரு சிலர் தங்களுடைய பணம், அதிகாரம், பெயர், புகழ் ஆகியவைகளைப் பற்றி மிகவும் பெருமையடித்துக் கொள்கிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் ஒரு சில நாட்களுக்கு மட்டுமே நிலைத்திருக்கப் போகின்றன. அவர்கள் இறந்த பிறகு இவைகளில் ஒன்று கூட அவர்களை பின் தொடர்ந்து போகப் போவதில்லை.

- இராமகிருட்டிண பரமஹம்சர்

# தோஷங்கள் நிவர்த்தியாகும் திருவிடந்தை திருத்தலம்

பார்த்தற்காய் அன்று பாரதம்
கைசெய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோத்து அங்கு ஆயர்தம் பாடியில் குரவை பிணைந்த எம்கோவலன்
ஏத்துவார்தம் மனத்துள்ளான்
இடவெந்தை மேவிய எம்பிரான்
தீர்த்தநீர்த் தடஞ்சோலை சூழ்
திருவேங்கடம் அடை நெஞ்சே! முதற்பத்து

- எட்டாம் திருமொழி

**புராண வரலாறு**

முன்னொரு காலத்தில் வாழ்ந்த மேகநாதன் என்ற அசுரனுக்கு பலி என்ற மகன் பிறந்து நீதிமானாய் அரசாட்சி செய்து வந்தபோது, மாலி, மால்யவான், சுமாலி என்ற மூன்று அசுரர்கள் தங்களுடன் இணைந்து வந்து தேவர்களுடன் போரிட அழைத்ததாகவும், பலி மறுத்து விட்டதாகவும், மூவரும் சென்று தேவர்களுடன் போரிட்டு, தோல்வியுற்று வந்து பலியிடம் சரணாகதி அடைந்ததாகவும், அவர்களுக்காக தேவர்களுடன் போராடி பலி ஜெயித்ததாகவும், தேவர்களுடன் யுத்தம் நடத்திய பாவம் நீங்க இத்தலத்தில் உள்ள வராக தீர்த்தக் கரையில் பலி கடும் தவம் புரிந்ததாகவும், அவனது தவத்தை மெச்சிய பெருமாள் வராக மூர்த்தியாக காட்சி அளித்ததாகவும் புராணம் கூறுகிறது. எனவே இத்தலத்திற்கு வராகபுரி என்ற பெயர் வழங்கலாயிற்று.

சம்பு தீவில் சரஸ்வதி ஆற்றங்கரையில் குனி என்னும் முனிவர் தவமியற்றி வந்தார். அவருக்கு பணிவிடை செய்வதற்கு கன்னிகை ஒருத்தி அங்கு வந்து சேர்ந்தாள். நாளடைவில் அம்முனிவர் வீடுபேறெய்தினார். கன்னிகை அம்முனிவரை பின்பற்றி கடும் தவமியற்றி வந்தாள். ஒரு நாள் நாரத முனிவர் அவர்முன் தோன்றி திருமணம் செய்து கொள்ளாமல் வீடு பேறு பெற இயலாது எனக் கூறினார். திருமணம் செய்து கொள்ள பல முனிவர்கள் தவமியற்றி வந்த இடத்தை அடைந்தாள். அம்முனிவர்களில் யாரேனும் ஒருவர் தன்னை மணம் புரிந்து கொள்ள வேண்டினாள். அவளது துயர நிலையைக் கண்டு காலவ முனிவர் அவளை மணந்து கொண்டார். பெரிய பிராட்டியார் லட்சுமியின் அருளால் ஓராண்டில் அவர்களுக்கு 360 கன்னிகைகள் தோன்றினர். முதல் கன்னிகையின் பெயர் கோமளவல்லி, குழந்தைகளை ஈன்றபின் அவளும் மறைந்தாள். காலவ முனிவர் அக்கன்னிகைகளை காப்பாற்ற இயலாதவராக சம்பு தீவிற்கு வந்த முனிவர்களிடம் விசனப்படவே, அவர்கள் அவரை திருவிடந்தை சென்று பெருமாளை வழிபடக் கூறினர். தம் கன்னிகைகளுக்கு நல்ல வரன்கள் அமைய வேண்டுமென அவரும் தம் பெண்களுடன் வந்து பெருமாளை வேண்டினார். பெருமாளும் அவர் வேண்டுகோளை ஏற்று, பிரம்மச்சாரியாக வந்து நாள் தோறும் ஒரு கன்னிகையை திருமணம் செய்து



கொண்டு, 360ம் நாள் அனைவரையும் ஒருவராக்கி அகிலவல்லி என்ற திரு நாமம் சூட்டி தன் இடப்பக்கத்தில் எழுந்தருளச் செய்து சரம சுலோகத்தை உலகத்தாருக்கு உபதேசித்து அருளினார். தினமும் திருமணம் செய்து கொண்டதால் பெருமாளுக்கு 'நித்யகல்யாண பெருமாள்' எனவும், இத்தலத்திற்கு 'நித்யகல்யாணபுரி' எனவும் பெயர்வழங்கலாயிற்று.

**திருவிடந்தை - பெயர்க்காரணம்**

எந்தை என்றால் எம்+தந்தை எனப் பொருள். எம் தந்தையாகிய பெருமாள், திரு(லட்சுமி)வை தம் இடப்பாகத்தில் கொண்டுள்ளதால் திருவிடவெந்தை எனப் பெயர் ஏற்பட்டது, பின் மருவி திருவிடந்தை ஆயிற்று.

பெருமாளுக்கு நித்யமும் (தினமும்) திருமணம் நடந்ததால் 'நித்தியகல்யாண புரி என்றும் பெரிய பிராட்டியார் அவதாரம் செய்த தலமாதலால் 'ஸ்ரீபுரி' என்றும் ஆதிவராக மூர்த்தியாக நின்று சேவை சாதிப்பதால் 'வராக புரி' என்றும் இத்திருத்தலம் அழைக்கப்படுகிறது. கல்வெட்டுகளில் காணப்படும் பெயர் 'அசுரகுல கால நல்லூர், வாமகவீபுரி' என்பதாகும்.

**மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகள்**

**மூர்த்தி:**

பெருமாளின் தசாவதாரங்களில் மூன்றாவது அவதாரமாகிய வராக அவதாரத்தில்ஆதிவராகப் பெருமாளாய், அகிலவல்லித் தாயாருடன் எழுந்தருளி அருள் பாலிக்கிறார்.

**தலம்:**

வராகபுரி என்றும், நித்யகல்யாணபுரி என்றும், ஸ்ரீபுரி என்றும் பாராட்டப்படுகின்ற இத்திருவிடந்தை 108 திவ்யதேசங்களில் 62வது திவ்யதேசமாகும்.

**தீர்த்தம்:**

கல்யாண தீர்த்தம், வராக தீர்த்தம், ரங்கநாதர் தீர்த்தம் ஆகிய தீர்த்தங்களை கொண்டது. கல்யாண தீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் பாவங்கள் அழியும் என்பதும், வராக தீர்த்தத்தில் மாசி மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் மோட்சம் கிடைக்கும் என்பதும், ரங்கநாதர் தீர்த்தத்தில் மார்கழி மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் நினைத்தது நடக்கும் என்பதும் பெருமாளின் அருள்வாக்கு. இத்தகைய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் சிறப்புப் பெற்றது இத்திருத்தலம்.

**மங்களா சாசனம்:**

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார் காலம் 8ம் நூற்றாண்டாகும். இவர் இத்திருக்கோயிலில் உள்ள பெருமாளை போற்றி 10 பாசுரங்களை பாடி மங்களாசாசனம் செய்துள்ளார். (பெரிய திருமொழி பாசுரங்கள் 1108 முதல் 1117) திருமலைக்குச் சென்று ஏழுமலையானைத் தரிசிக்கும் போதும் 'ஏத்துவார்தம் மனத்துளான் இடவெந்தை மேவிய எம்பிரான், தீர்த்த நீர்தடம் சோலைசூழ் திருவேங்கடம் அடைநெஞ்சமே' என்று திருவிடந்தை





பெருமாளைப் பாடி பரவியுள்ளார். அழகிய மணவாளதாசர் நூற்றெட்டு திருப்பதி அந்தாதியில் 92வது பாசுரத்தில் 'தொண்டானேன் திருவிடவெந்தைக்கே செறிந்து' எனவும். குரவை ராமானுஜதாசர் தனது நூற்றெட்டு திருப்பதி திருப்புகழில் 92வது பாசுரத்தில் 'இடவெந்தை பதிவாழ்மேவிய பெருமாளே' எனவும் பாடிப் பரவியுள்ளனர்.

**தோஷங்கள் நிவர்த்தி தலம் :**

உற்சவர் நித்தியகல்யாண பெருமாள், கோமளவல்லித் தாயார் இருவருக்கும் தாடையில் இயற்கையிலேயே அமைந்த திருஷ்டிப் பொட்டு, சேவிப்போரது திருஷ்டி தோஷத்தை நீக்குகிறது. தம்பதி சமேதராய் வராகப் பெருமாளின் திருவடியை சிரசில் தாங்கி நிற்கின்ற ஆதிசேஷன் தம்பதியை சேவிப்பவர்களுக்கு ராகு கேது தோஷங்கள் நீங்குகின்றன. பள்ளி கொண்ட பெருமாளாய் ஸ்ரீதேவி, பூதேவியுடன் சேவை சாதிக்கின்ற ரங்கநாதரை தரிசிப்போருக்கு சுக்ரதோஷம் நிவர்த்தியாகிறது. நித்யமும், திருமணம்செய்து கொண்ட மூலவர் ஆதிவராகப் பெருமாளை சேவிப்பவர்களுக்கு திருமணம் நடை பெறுவதில் உள்ள தோஷங்கள் அனைத்தும் நிவர்த்தியாகின்றன.

திருமணமாகாத ஆணோ, பெண்ணோ, கல்யாண தீர்த்தத்தில் குளித்து விட்டு ஆச்சாரத்துடன் தேங்காய், பழம், இரு கஸ்தூரி மாலைகள் வெற்றிலைப்பாக்குடன் கோயிலுக்குள் சென்று பெருமாள் முன்பு தன்பெயரில் அர்ச்சனை செய்து விட்டு, அர்ச்சகர் கொடுக்கும் ஒருமாலையை கழுத்தில் அணிந்து கொண்டு ஒன்பது முறை கோயிலை பிரதட்சணம் வரவேண்டும். பின் கொடிமரம் அருகில் வடக்கு நோக்கி விழுந்து சேவித்துவிட்டு மாலையை வீட்டுக்கு எடுத்துச் சென்று பத்திரமாக வைக்க வேண்டும். திருமணம் முடிந்தபிறகு தம்பதியினர் பழையமாலையுடன் வந்து, அர்ச்சனை செய்துவிட்டு, செல்லவேண்டும், ராகு கேது தோஷங்கள், திருஷ்டிதோஷம் ஆகியவை நிவர்த்தி ஆகவும் மேற்கண்டவாறு வழிபாடுகளை செய்திட வேண்டும்.

**திருக்கோயில் வழிபாட்டுமுறை :**

குளித்து சுத்தமான ஆச்சாரத்துடன், தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, துளசி ஆகியவற்றுடன் கோயிலுக்கு வரவேண்டும், சன்னதியில் அர்ச்சனை செய்துவிட்டு பிரகாரத்தை 4 முறை சுற்றிவிட்டு கொடி மரத்திற்கு அருகில் வடக்கு நோக்கி தலைவைத்து கீழே விழுந்து வணங்க வேண்டும். கொடி மரத்திற்கு அருகில் நின்று தமது வேண்டுதல்களை இறைவனிடம் சொல்ல வேண்டும். மூலஸ்தானத்தை சேவித்துவிட்டு இதர சன்னதிகளை பிறகு சேவிக்க வேண்டும். கோயிலின் உள்ளே இறைசிந்தனை மட்டுமே மேலோங்கிட வேண்டும்.

**கல்வெட்டுகள் கூறும் திருக்கோயில் வரலாறு**

தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் 1910ம் ஆண்டில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் (வ.எண் 258 முதல் 283) இருந்து கீழ்க்காணும் அரிய வரலாற்று உண்மைகளை அறியலாம். 1.கி.பி.8ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் திருவிடந்தை பெருமாளைப் போற்றி பாசுரங்கள் பாடியுள்ளதால் கி.பி.8ம் நூற்றாண்டிலிருந்தே இத்திருக்கோயிலின் வரலாறு தொடங்குவதாகக் கொள்ளலாம். 1200 வருடங்களுக்கு முற்பட்ட தொன்மையான திருத்தலம் திருவிடந்தை. 2. ராஷ்டிர கூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் (கி.பி.939 முதல் 966வரை) படைப்பிரிவை சேர்ந்த இரணகேசரி என்பவனும், அவனது மனைவி நங்கைவராகியும் திருவிடந்தை பெருமாளுக்கு தானம் வழங்கி உள்ளதாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. 3. ராஜராஜனின் கி.பி.1004ம் ஆண்டு கல்வெட்டில் மலை நாட்டைச் சேர்ந்த வணிகன் ஒருவன் திருவிடந்தை கோயிலில்



திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர், திரு. இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆகியோர்.

உணவு அளிக்க 16 கழுஞ்சுப் பொன்னை அளித்துள்ளான். மாசி மாதம் முதல் நாள் தொடங்கி 30 நாட்களுக்கு அந்தணர்களுக்கு உணவளிக்குமாறு இக்கல்வெட்டு மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 4. முதலாம் ராஜ ராஜனின் (கி.பி. 985 முதல் 1014) ஆறு கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளது இம்மன்னனின் 17ம் ஆட்சியாண்டில் ஆவணித் திங்கள் சதய நட்சத்திர தினத்தன்று 'ராஜராஜன் திருநாள்' என்ற பெயரில் இவனது திருநட்சத்திரத் திருநாள் கொண்டாடப்பட்டது. 5. முதலாம் ராஜாதி ராஜனின் (கி.பி 1018 முதல் கி.பி 1063) கல்வெட்டு ஒன்றில் திருவிடந்தை பெருமாளுக்கு இக்கிராமமே தேவதானமாக வழங்கப்பட்ட செய்தி தெரிகின்றது. இவ்வரசாணையினை மன்னன் தனது கங்கை கொண்ட சோழபுர அரண்மனையில் நீராடி கொண்டிருந்த போது வழங்கியுள்ளான். எனவே, அரசன் தான் எத்தகைய அலுவல்களில் ஈடுபட்டிருந்தாலும், இறைவனுக்கு கொடை வழங்குவதற்கு முதலிடம் அளித்துள்ளது தெளிவாகிறது. 6. ராஜ மகேந்திரனின் கல்வெட்டு (கி.பி 1061) ஒன்றில், சிறுதாவூர் கிராமத்தைச் சார்ந்த ஒருவன் திருக்கோயிலில் விளக்கெரிக்க 90 ஆடுகளை அளித்த செய்தி கூறப்படுகிறது. 7. மூன்றாம் ராஜராஜனின் (கி.பி. 1216 முதல் 1260) காலத்தில் மூன்று கல்வெட்டுகளில் விளக்குகள் திருக்கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட செய்தி தெரிய வருகிறது.

8. மாறவர்ம குலசேகர பாண்டியன் (கி.பி. 1314 முதல் 1345) காலத்திய கல்வெட்டு திருவிடந்தை அசுர குலகால நல்லூர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதைக் கூறுகிறது. 9. கி.பி. 959 முதல் பி.பி 1354 வரையிலான இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் ராஷ்டிரகூடர்கள், சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் ஆகிய மன்னர்கள் இத்திருக்கோயிலுக்குச் செய்த பல்வேறு கைங்கர்யங்களை தெளிவாகக் கூறுகிறது.

### திருக்கோயில் அமைவிடம்

சென்னைக்கு தெற்கே, எழில் மிகு கிழக்கு கடற்கரை சாலையில் 42 கி.மீ. தூரத்திலும், கோவளத்தில் இருந்து 3கி.மீ. தூரத்திலும், மாமல்லபுரத்தில் இருந்து வடக்கே 16கி.மீ. தூரத்திலும், வங்காளவிரிகுடா கடலை நோக்கியவாறு கிழக்கு நோக்கி இத்திருக்கோயில் அமைந்து உள்ளது. தொண்டை நாட்டு திருப்பதிகள் 22ல் இது சிறப்புப்பெற்றது. சென்னையிலிருந்து பேருந்து தடம் எண்கள் 118, 188ஏ, 188கே ஆகிய பேருந்துகளும், கோவளத்தில் இருந்து காண்டீபன், 117 எண் உள்ள பேருந்துகளும், வேன்களும் இத்திருக்கோயில் வழியே செல்கின்றன. திருவிடந்தை செல்வோம், திருமாளின் அருள்பெறுவோம்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., உதவி ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்


திருவான்மியூர், சென்னை - 600 041.
போன் : 24410477
இணைய தளம் - www.marundeeswarartemple.com
மின்னஞ்சல் - marundeeswarartemple@vsnl.net


இத்திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்று சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது. அகத்தியருக்கு மூலிகையின் தன்மை பற்றிய பூரண அறிவையளித்த காரணத்தினால், இத்தலத்து இறைவன் மருந்தீசுவரர் என வழங்கப்படுகிறார். மருந்தீசுவரரைப் பிணியாளர்கள் உளமார வழிபட்டு நோய் நீங்கப் பெறுகின்றனர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த இத்திருத்தலம் சைவ சமய குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல் பெற்ற சிறப்பு வாய்ந்ததாகும். இறைவன் வான்மீகி முனிவருக்குக் காட்சியளித்தார். அம்முனிவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, இவ்வூர் திருவான்மீகியூர் என்றழைக்கப் பெற்று, பின்னர் மருவி திருவான்மியூர் என்றழைக்கப் பெறுகிறது. அருள்மிகு தியாகராஜர் 18 திருநடனம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இத்திருநடனம் பௌர்ணமி மற்றும் சிறப்பு நாட்களில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| சுவாமி | - | அருள்மிகு மருந்தீசுவரர் |
| அம்பாள் | - | அருள்மிகு திரிபுரசுந்தரி (நின்ற திருக்கோலம்) |
| தலவிருட்சம் | - | வன்னி மரம் |
| திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் | - | காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை<br>மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை |
| தினசரி பூசை | - | காமிக ஆகமப்படி - நான்கு காலங்கள் நடைபெறுகிறது. |
| திருவிழாக்கள் | - | வைகாசி - வசந்த உற்சவம், ஆனி - நடராஜர் அபிஷேகம்,<br>ஆடி - பூரம், ஆவணி - அதிபத்தர் உற்சவம்,<br>புரட்டாசி - நவராத்திரி, ஐப்பசி - கந்தர் சஷ்டி,<br>மார்கழி - மாணிக்க வாசகர் உற்சவம், ஆருத்ரா,<br>பங்குனி - பிரம்மோற்சவம் 11 நாட்கள். |
| மாத உற்சவங்கள் | - | பிரதோஷம். கிருத்திகை, பௌர்ணமி, |
| கட்டண விவரம் | - | அஷ்டோத்திரம் - ரூ.2/-, பிரதோஷம் - ரூ.2000/-<br>சுவாமி அபிஷேகம்-ரூ. 400/-, அம்மன் அபிஷேகம்-ரூ.500/-<br>சுவாமி அம்மன் அபிஷேகம் - ரூ. 750/-<br>பஞ்சமூர்த்தி அபிஷேகம்ரூ.1600/-, புஷ்ப பாவாடை ரூ.500/-<br>தங்கரத உலா உபயம் -ரூ.1500/-, பள்ளியறை பூசைரூ.150/-<br>பௌர்ணமி தியாகர் உற்சவம் ரூ.4000/-<br>அன்னதானத் திட்டம் ரூ.1200/- (நாள் ஒன்றுக்கு)<br>நிரந்தர முதலீடு ரூ.15,000/- |

இங்ஙனம்,

தெ.ப.ஏகாம்பரம், எம்.ஏ.,
செயல் அலுவலர்.

ந.மாயகிருஷ்ணன்
அறங்காவலர் குழுத்தலைவர்

துரை கபிலன் கி.கோபாலகிருஷ்ணன் இரா.ரவிச்சந்திரன் மு.நாகமணி
அறங்காவலர்கள்

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

# தைப்பூசத் திருவிழா அழைப்பிதழ்

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2007ம் ஆண்டு தைப்பூசத் திருவிழா வருகிற 26-1-2007ம் நாள் தொடங்கி 4-2-2007ம் நாள் முடிய நடைபெற உள்ளது. தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பழனி திருக்கோயில் நிர்வாகம் சார்பாக பக்தர்களுக்கு செய்துள்ள வசதிகள்.

**பஞ்சாமிர்தம் :** இத்திருக்கோயிலில் விசேசபிரசாதமான அபிசேகப் பஞ்சாமிர்தம், மலை வாழைப்பழம், முதல் தரமான கரும்புச்சர்க்கரை, பேரீச்சை, நெய், கற்கண்டு, தேன், ஏலக்காய் முதலிய தரமான பொருட்களைக் கொண்டு இயந்திரம் மூலமாகச் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டு சுகாதாரமான டப்பாக்களில் அடைக்கப்பட்டு 500கிராம் எடை உள்ளது ரூ.25/- மற்றும் ரூ. 30/- வீதம் திருக்கோயில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களான 1. மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகாரம், 2. மலைக்கோயில், வடக்கு வெளிப்பிரகாரம், 3.வின்ச் நிலையம், 4. ரோப்கார் நிலையம், 5. மங்கம்மாள் மண்டபம் அருகில், 6. பாத விநாயகர் கோயில், 7. பேருந்து நிலைய தகவல் நிலையம் ஆகிய ஏழு விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இறையன்பர்கள் பஞ்சாமிர்த பிரசாதத்தை பெற்று இறையருள் பெற அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**அன்னதானம் :** இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பக்தர்கள் ரூ.25000/- டெபாசிட் செலுத்தி 200 நபர்களுக்கும் அல்லது ரூ. 15000/- டெபாசிட் செலுத்தி 100 நபர்களுக்கும் குறிப்பிட்ட ஒரு நாளைக்கு மட்டும் அன்னதானம் வழங்க அன்னதான கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பக்தர்கள் பங்கு பெறலாம். மேலும் ரூ.2500/- செலுத்தினால் ஒரு நாளைக்கு மட்டும் 200 நபர்களுக்கும், ரூ.1500/- செலுத்தினால் ஒரு நாளைக்கு மட்டும் 100 நபர்களுக்கும் உபயதாரர்கள் பெயரில் மலைக் கோயிலில் அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

### இதர ஏற்பாடுகள்

1. கிழக்கு கிரிவீதியில் திருக்கோயில் சார்பாக பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. பாதயாத்திரை வழித்தடங்களில் நிழற்பந்தல், குடிநிர் வசதி, மின்வசதி, குளியல் அறை மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
3. ரெட்டியார் சத்திரம், ஒட்டன்சத்திரம், சத்திரப்பட்டி, ஆயக்குடி ஆகிய இடங்களில் உள்ள காவடி மண்டபங்கள் புதுதாராபுரம்- தாச்சநாயக்கன்பட்டி தங்கும் மண்டபம் ஆகிய இடங்களில் குளியல், கழிப்பறை வசதிகளுடன் பாதயாத்திரை பக்தர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாலை ஓரங்களில் நிழற்பந்தல் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
4. பாதயாத்திரை வழித்தடங்களில் நடமாடும் மருத்துவ வசதிகள் முதலுதவி வசதியுடன் - அனைத்து இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
5. மலைக்கோயில், குடமுழுக்குநினைவரங்கம் மற்றும் பலஇடங்களில் அன்னதானவசதி செய்யப்பட்டுள்ளது.
6. வடக்கு கிரிவீதியிலுள்ள குடமுழுக்கு நினைவரங்கில் பக்தர்களுக்கு 29.1.2007ம் தேதி முதல் 4.2.2007ம் தேதி முடிய மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி முடிய கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
7. நவீன வசதிகளுடன் தங்கும் அறைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
8. பக்தர்கள் வசதிக்காக கம்பிவட ஊர்தி மற்றும் வின்ச் இயக்கப்படுகிறது.
9. மேற்கு கிரிவீதியில் உள்ள கோசாலா தங்கும் விடுதியில் திருக்கோயில் மருத்துவர்களைக் கொண்டு சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

### முக்கிய திருநாட்கள்

| | | | |
|---|---|---|---|
| 26-01-2007 | - | கொடியேற்றம் | வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேல் 10.15 மணிக்குள் |
| 31-01-2007 | - | திருக்கல்யாணம் | புதன்கிழமை மாலை 7.00 மணிக்கு மேல் 8.00 மணிக்குள்<br>வெள்ளிரதம் புறப்பாடு இரவு 8.30 மணிக்குள் |
| 01-02-2007 | - | தைப்பூசம் திருத்தேர் | வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு |
| 04-02-2007 | - | தெப்பத்திருவிழா | ஞாயிற்றுக்கிழமை |

**தரிசன வழி விபரங்கள் 1.பொது தரிசனம் வழி-கட்டணம் இல்லை, 2.சிறப்பு அனுமதி வழி-ரூ. 20/-, 3.தனிவழி சிறப்புக் கட்டணம்-ரூ. 200/-**

**திரு. மு.க. பாலசுப்ரமணியன், பி.ஏ., பி.எல்.,**
இணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி

**திரு. ஆர். சுதர்சன், பி.எஸ்ஸி., பி.எல்.,**
துணை ஆணையர்

**திரு. சீ.செல்வராஜ், எம்.ஏ., பி.எல்.,**
உதவி ஆணையர்/ நேர்முக உதவியாளர்

**திரு. எஸ்.வி. பாலசுப்பிரமணியம்**
அறங்காவலர் குழுத்தலைவர்

**திரு. கார்த்தி ப. சிதம்பரம், அறங்காவலர்**
**திரு. மோகன் பி. கந்தசாமி, அறங்காவலர்**
**திரு. இந்திரா ரவிச்சந்திரன், அறங்காவலர்**
**திரு. ஆ. நாகராஜன், அறங்காவலர்**